## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.10.2018 | குழந்தை இயேசுவின் புனித தெரேசா - திருப்பலி | 02 |
| 02.10.2018 | புனித காவல் தூதர்கள் - திருப்பலி | 03 |
| 04.10.2018 | புனித பிரான்சிஸ் அசிசியார் - திருப்பலி | 04 |
| 05.10.2018 | புனித ஆல்பர்ட் மர்வெல்லி - திருப்பலி | 05 |
| 07.10.2018 | ஆண்டின் பொதுக்காலம் 27ம் ஞாயிறு - திருப்பலி | 06 |
| 13.10.2018 | அருளாளர் அலெக்சாண்டிரீனா மரிய தா கோஸ்தா | 07 |
| 14.10.2018 | ஆண்டின் பொதுக்காலம் 28ம் ஞாயிறு - திருப்பலி | 09 |
| 15.10.2018 | புனித அவிலா தெரேசா - திருப்பலி | 10 |
| 17.10.2018 | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் - திருப்பலி | 11 |
| 18.10.2018 | புனித லூக்கா நற்செய்தியாளர் விழா - திருப்பலி | 12 |
| 21.10.2018 | ஆண்டின் பொதுக்காலம் 29ம் ஞாயிறு - திருப்பலி | 13 |
| 22.10.2018 | புனித திருத்தந்தை 2ம் ஜான்பால் - திருப்பலி | 15 |
| 24.10.2018 | புனித லூஜி குவனெல்லா - திருப்பலி | 16 |
| 28.10.2018 | ஆண்டின் பொதுக்காலம் 30ம் ஞாயிறு - திருப்பலி | 17 |
| 29.10.2018 | அருளாளர் தொன் மைக்கேல் ரூவா - திருப்பலி | 19 |


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. செபமாலை வழியில் ஜெயம் பெறுவோம் 20
2. அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரிய தா கோஸ்தா 22
3. விண்ணிலிருந்து விடும் ரோஜா மலர் (புனித தெரேசா) 24
4. திருச்சபை செய்திகள் 26

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.10. 2018 குழந்தை இயேசுவின் புனித தெரேசா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, நம் திருஅவையானது குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் திருவிழாவைக் கொண்டாட அழைக்கின்றது. குழந்தை இயேசுவின் புனித தெரேசா 1873ம் ஆண்டு ஜனவரி 2ம் நாள் பிறந்தார். இவர் தனது 4வது வயதில் தந்தையை இழந்தார். தனது 15வது வயதில் கார்மேல் சபையில் இணைந்தார். புனித தெரேசா வாழ்ந்து வந்த நகருக்கருகில் பிரான்சினி என்ற கொலைக் காரன் சிறையிலே தள்ளப்பட்டு, தூக்குத் தண்டனையும் உறுதி செய்யப்பட்டிருந்தான். பிரான்சினி கடவுள்மேல் நம்பிக்கையற்றவனாய், இறைவனைப் பழிக்கும் அவதூறான வார்த்தைகளைச் சொல்வதைக் கேள்வியுற்று, அந்த ஆன்மா நரகத்திற்குப் போய்விடக்கூடாது என்பதற்காக தெரேசா கடுந்தவம் மேற்கொண்டு, செபத்தில் ஈடுபட்டார்.

பிரான்சினி புனிதையின் இடைவிடாத செபத்தின் பயனாக தனது தூக்குமேடையில் மனம்மாறி பாடுபட்ட சுரூபத்தை முத்தமிட்டு மரித்தான். இச்செய்தியை அறிந்த தெரேசாவிற்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்நிகழ்ச்சி தான் குழந்தை தெரேசாவை ஆன்மாக்களுக்காக செப தவ முயற்சிகளில் ஈடுபட வைத்தது. நாமும் இவரைப்போல பிறருக்காக செபிக்கும் பண்பை வேண்டி இத்திருப்பலியில் புனித குழந்தை இயேசுவின் தெரேசா வழியாக இறைவனிடம் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. "அன்புதான் எனது தேவ அழைத்தலுக்குத் திறவுகோலாய்" இருந்தது. இன்று இறையழைத்தலின் மேன்மையை உணர்ந்து துறவற நிலையில் இறைப்பணிபுரியும் நம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவருக்கும் நல்ல ஆன்ம உடல் சுகம் தந்து, துறவற வாழ்விலும், நற்செய்திப் பணியிலும் திறம்படச் செயலாற்ற உமது தூய ஆவியின் வல்லமையை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. புனிதம் என்பது இறைவனின் கைகளில் சிறியோராகவும், தாழ்ச்சியுள்ளவராகவும் இருக்கிறோம் என்பதை உணர்த்துவதாகும் என்று கூறிய இப்புனிதையைப்போல நாமும் நம்மையே தாழ்த்திக் கொள்ளவும், குழந்தை உள்ளத்தோடு வாழும் எளிய மனதைத்தரவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. "இயேசுவே எனது அன்பே, எனது தேவ அழைத்தலைக் கண்டுபிடித்துவிட்டேன், அன்புதான் எனது தேவ அழைத்தல்," என்று மொழிந்த புனித தெரேசாவைப்போல் நமது இல்லங்களிலும், பங்கிலும், இறைவனின் அன்பை உணர்ந்து, ஆர்வமுடன் இறைப்பணி செய்திடவும், தியாகப்பணி செய்திடவும், பரந்த தாராளமான உள்ளத்தைத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





## 02.10.2018 புனித காவல் தூதர்கள் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறைவனின் உடலை உண்டு ஊட்டம் பெறுவதற்காக இந்த ஆலயத்திற்கு வந்திருக்கிற எனதருமை சகோதர, சகோதரிகளே, இன்று திருஅவை புனித காவல் தூதர்களுக்கு விழா எடுத்து சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. காவல் தூதர்கள் மூன்று வகையான பணிகளைச் செய்து வருகிறார்கள். 1. இறைவனைத் துதிப்பது, 2. இறைவனின் செய்தித் தொடர்பாளராக இருப்பது (விப. 23: 20,21) 3. மனிதர்களைப் பாதுகாப்பது (திபா. 91:11). ஒவ்வொருவருக்கும் ஒரு காவல் தூதர் உண்டு. காவல் தூதர்கள் நம்முடனிருந்து சாத்தானின் சோதனைகளில் வீழ்ந்துவிடாமல் நம்மைப் பாதுகாத்து வருகிறார்கள். புனித பெர்னார்து "என் முன் என் சமூகத்தில் செய்யத் துணியாததை உங்கள் காவல் தூதர்களின் முன்னிலையில் செய்யாதீர்கள்" என்று தம்முடைய துறவிகளுக்கு கூறுகிறார். நம் காவல் தூதரை அடிக்கடி நாம் நினைத்து அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

காவல் தூதர்களுக்கு விழா எடுத்து அக்டோபர் 2ம் நாளில் கொண்டாடுவதற்கு திருத்தந்தை 10ம் கிளமெண்ட் அனுமதி அளித்தார். இந்த நாளில் காவல் தூதரே, ஆன்ம உடல் ஆபத்துகளிலிருந்து எங்களைக் காத்து வழிநடத்தும் என்று இத்திருப்பலியில் மன்றாடி பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆண்டவரே, நீதியுள்ளவரே, எங்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினராகிய நாங்கள் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து புனித வாழ்வு வாழ வேண்டிய வரத்தைத் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. விண்ணகத் தந்தையே எம் நாட்டுத் தலைவர்களையும் நாட்டு மக்கள் அனைவரையும் உம்முடைய விலைமதிப்பற்ற திருக்கரங்களில் ஒப்படைக்கின்றோம். எம் நாட்டில் ஒற்றுமை, சகோதரத்துவம், நீதி நிறைந்த ஆட்சி மேம்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. எங்களை வழிநடத்தும் வானகத்தந்தையே இறைவா, உமக்கு பிரமாணிக்கமுள்ள விவேகம் நிறைந்த வல்லமை கொண்ட காவல்தூதர்களை எங்களுக்குக் கொடுத்தற்காக உமக்கு நன்றி. காவல் தூதர்கள் மூலம் எங்களையும் எங்கள் இளையோரையும் சரியான பாதையில் நடத்திச் செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.10.2018 புனித பிரான்சிஸ் அசிசியார் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

புனித பிரான்சிஸ் அசிசியார், இத்தாலி நாட்டிலுள்ள அசிசி நகரில் 1181 பியட்ரோ பெர்னார்டோன் டி மரிகொனி என்ற மிகப்பெரிய பட்டுத்துணி வியாபாரிக்கும் பிகா டி பௌர்லமோன்ட் என்கிற பக்தியுள்ள தாய்க்கும் ஏழாவது குழந்தையாகப் பிறந்தார். இளம் வயதில் தனது வசதிக்கேற்ப பணக்கார வாலிபர்களுடன் வாழ்க்கையை இன்பமாக அனுபவித்து வந்தார். பேரும் புகழும் கிடைக்க வேண்டும் என்பதற்காக இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். கி.பி. 1204ம் ஆண்டு தீர்க்க முடியாத நோயினால் அவருடைய உடல்நிலை பாதிப்படைந்தது. இந்நிலையில் அவரில் ஆன்மீகச் சிந்தனைத் தலைத் தூக்கியது. அருகிலுள்ள தமியோனோ ஆலயத்தில் சென்று செபிக்க ஆரம்பித்தார். அப்படி செபித்த வேளையில் இறைவனது குரலைக்கேட்டு ஆண்டவருக்குப் பணிபுரிய தன்னை ஒப்புக் கொடுத்தார். தந்தையின் கடும் எதிர்ப்பையும் மீறி தனது ஆன்மீகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

ஆண்களுக்கான முகுஆ என்கிற துறவற சபையையும், பெண்களுக்கான Order of St. Clare என்கிற துறவற சபையையும், பொதுநிலையினருக்கான மூன்றாம் சபையையும் நிறுவி திருஅவையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். வரலாற்றில் அதிகம் போற்றப்படுகின்ற புனிதர்களில் இவரும் ஒருவர் ஆவார். கி.பி. 1226ம் ஆண்டு அக்டோபர் 3ம் நாள், தனது 44வது வயதில் இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தை 9ம் கிரகோரியார் அவர்கள் 1228ம் ஆண்டு ஜூலை 16ம் நாள் இவருக்கு புனிதர் பட்டத்தை வழங்கினார். இவரது திருவிழா அக்டோபர் 4ம் நாள் உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. "அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே" என்கிற இவரது செபம் உலகப் பிரசித்திப் பெற்றது. இவரது திருவிழாவினைச் சிறப்பிக்கும் நாம் இயற்கையின்மீது ஆர்வமுடையவராய் இவரைப்போல அமைதியின் தூதுவராய் செயல்பட வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் கலந்துக்கொள்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையை வழிநடத்தும் அனைத்து அருட்பணியாளர்களும், இருபால் துறவறத்தாரும் புனித பிரான்சிஸ் அசிசியார் போல் தன்னலம் துறந்து இறைப்பணியே இன்பம் என வாழ உமதருள்வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. வழிநடத்தும் இறைவா, இன்று விழா கொண்டாடும் புனித பிரான்சிஸ் அசிசியாரின் பெயர் கொண்ட எம் திருத்தந்தையை உம் கரத்தில் ஒப்படைக்கின்றோம். அவருடைய அனைத்து தேவைகளிலும் நீர் உடனிருந்து செய்கின்ற செயல்களையும், எடுக்கின்ற முடிவுகளையும் உம் தூய ஆவியாரின் வல்லமையால் ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





3. படைத்தவரே எம் இறைவா, புனித பிரான்சிஸ் அசிசி இயற்கையை மிகவும் நேசித்து அவைகளை அன்பு செய்ததுபோல் நாங்களும் இயற்கையின் மேன்மையை உணர்ந்து அதனைக் காத்திட ஒவ்வொருவருக்கும் தேவையான ஞானத்தைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 05.10. 2018 புனித ஆல்பர்ட் மர்வெல்லி திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

ஆல்பர்ட் மர்வெல்லி 1918ம் ஆண்டு மார்ச் 21ம் நாள் இத்தாலி நாட்டில் ஃபெரோரா என்னும் ஊரில் பிறந்தார். இவர் தனது இளமைப் பருவத்தில் சலேசியர்களால் நடத்தப்பட்ட ஆரட்டரியிலும், கத்தோலிக்க இயக்கத்திலும் சேர்ந்தார். அங்குதான் இவர் தனது நம்பிக்கையில் முதிர்ச்சியைப் பெற்று புனிதத்தை அடைய வேண்டும் என்ற உறுதியான தீர்மானத்தை எடுத்தார். திருத்தந்தை வெளிப்படுத்திய இவரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்பிலிருந்து, "இவர் வலிமையும் உறுதியும் கொண்டு விளங்கினார். விளையாட்டுக்களை, குறிப்பாக மிதிவண்டி ஓட்டுவதை அதிகமாக விரும்பினார், மறைக்கல்வியைக் கற்றுக்கொடுத்து, திருத் தூதுப்பணி ஆர்வத்தை வெளிப்படுத்தினார். பிறரன்பைக் கடைப்பிடித்து, அமைதியாகக் காணப்பட்டார்" என்பதை நாம் அறிகிறோம். இத்தாலிய கத்தோலிக்க இயக்கத்தின் உறுப்பினராக இருந்து, புனித வாழ்வு வாழ்ந்து, அருளாளர் நிலையை அடைந்த பியர் ஜியார்ஜியோ பிரசாத்தி (1901-1925) என்பவரை இவர் தனது இளமைப் பருவத்தின் முன்மாதிரியாகத் தேர்ந்துக் கொண்டார்.

ஏழைகளுக்காகத் தன்னையே அர்ப்பணித்து கடினமாக உழைத்தார். போர் முடிந்தபிறகு தங்களுடைய நகரை புதுப்பிக்கும் பணியிலும் மும்முரமாகச் செயல்பட்டார். ஏழைகளுக்காக பணிபுரிந்த அந்நாட்களில் தன்னிடமிருந்த காலணிகளை அவர்களுக்குக் கொடுத்து விட்டு வெறுங்காலோடு நடந்து பணி செய்தார். உயிருக்காக பயந்து ஒளிந்து கொண்டிருந்த அகதிகளைத் தனது மிதிவண்டியின் மூலம் தேடிச் சென்று அவர்களுக்கு உணவளித்து வந்தார். 1945ம் ஆண்டு ரிமினி மறைமாவட்ட ஆயர் இவரை கத்தோலிக்க நிபுணர்களை வழிநடத்தும்படி கேட்டுக்கொண்டார். இவர் தன்னுடைய அர்ப்பண வாழ்வை, "கலாச்சாரம் மற்றும் பிறரன்பு" என்ற இரண்டே வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். இத்தாலிய கத்தோலிக்க பணியாளர்களின் இணை நிறுவனராக பணியாற்றியபோது, கட்டுமானப் பணி செய்யும் பணியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கினார். அவர் நற்கருணையின்மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர். இவர் 1946ம் ஆண்டு அக்டோபர் 5ம் நாள் நடந்த தேர்தலின்போது வாக்களிக்க வாக்குச் சாவடிக்கு மிதிவண்டியில் சென்ற வழியில் இராணுவ வாகனம் மோத இயற்கை எய்தினார். விண்ணக வாழ்வை இவர் அடைந்தபோது இவருக்கு வயது 28. இவரையும், இவருடன் கத்தோலிக்க இயக்கத்தில் பிறரன்புப் பணிபுரிந்து இறந்த வேறு இருவரையும் திருத்தந்தை இரண்டாம் அருள்

சின்னப்பர் 2004ம் ஆண்டு செப்டம்பர் 5ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவருக்கு திருத்தந்தை "பிறரன்பின் பொறியியல் வல்லுநர்" என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கினார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

**பதில்: ஆண்டவரே, எம் வேண்டுதலைத் தயவாய்க் கேட்டருளும்.**

1. திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் நல்லாயனாகிய கிறிஸ்து தங்களிடம் ஒப்படைத்த மந்தையை நன்றாகப் பராமரித்து பேணிக்காக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், ஊனமுற்றோர், ஒடுக்கப்பட்டோர், உயிரிழந்தோர் அனைவரும் உமது அன்பையும் வல்லமையையும் காணவும் உமது பராமரிப்பையும், தூண்டுதலையும் தங்கள் வாழ்வில் பெற்று அனுபவிக்கவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தின் வழியாக அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லியை நினைவு கூறும் நாங்கள் அவரது முன்மாதிரியால் தூண்டப்பெற்று பணிபெறுவதை விடுத்து, தாராளமுடன் பணிபுரியவும், நம்பிக்கையின் வாழ்வுக்கேற்ற நற்செயல்கள் புரியவும் வரம் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 27ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு.D.V.R. ராஜா

I. தொ.நூ. 2: 18-24 II. எபி: 2: 9-11 மாற்கு 10: 2-16

இறையேசுவில் அன்புக்கினியோரே, நம் திருஅவையானது இன்று பொதுக்காலம் 27ம் ஞாயிறைச் சிறப்பிக்க அழைக்கின்றது. இன்றைய வாசகங்கள் நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற பொன்மொழிக்கு விளக்கங்களாக அமைகின்றன. மனிதன் தனிமையாக இருப்பது நன்றன்று என்று, ஆண் பெண் இருவராக படைத்து குடும்ப வாழ்வின் முன்னோடியாக உருவாக்கி அவர்களிடையே அமைதி, அன்பு, ஒற்றுமை, விட்டுக்கொடுத்தல் போன்ற பண்புகள் வெளிப்பட இறைவன் விரும்பினார்.

ஆனால் இன்றைய குடும்பங்களில் கணவன் மனைவியரிடையே பல பிரச்சனைகள், பிரிவினைகள், கருத்து வேறுபாடு, கீழ்ப்படிதலின்மை, நான்தான் உயர்ந்தவர், என் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்னும் காரணங்கள் மேலோங்கி நிற்கிறது. இவைகளுக்கு பிரதான காரணிகளாக ஊடகங்கள், மேலைக்கலாச்சாரம், தொலைத் தொடர்பு கருவிகள் இருக்கின்றன. இந்நிலை உலகிலுள்ள மூலைமுடுக்கெல்லாம் பரவி உறவுகளை சீரழிக்கிறது. மேலும் வளர்ந்து வரும் அதீத அறிவியல் வளர்ச்சியால் மனித மாண்புகள் மறைந்துக் கொண்டிருக்கிறது. எனவே நாம் உலகின் போக்கில் செல்லாது அறிவியலுக்கும் அநேக துர்மாதிரிகளுக்கும் அப்பாற்பட்ட ஆண்டவரது ஆற்றலையும் அன்பையும்





உணர்ந்து இன்றைய நற்செய்தியில் சிறு பிள்ளைகளைப்போல் மாறாவிடில் விண்ணரசுக்குள் நுழைய முடியாது என்பதையும் கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும் என்பதையும் நினைவில் கொண்டு, கணவன் மனைவி இருவரும் விட்டுக்கொடுத்து அன்புறவில் என்றென்றும் நிலைத்திருக்க இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருத்தந்தை மற்றும் திருஅவைக்காக மன்றாடுவோம்:** அன்பு ஆண்டவரே எமது கத்தோலிக்க திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தைக்கு உமது வல்லமை மிகுந்த ஆற்றலை ஈந்து, அவர் சந்திக்கின்ற அனைத்து சவால்களிலும் வெற்றிக்கண்டிட ஆற்றல்களையும், தூய ஆவியாரின் வல்லமையையும் நிறைவாகப் பொழிந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. **குடும்பங்களுக்காக மன்றாடுவோம்:** எம் பங்கிலுள்ள குடும்பங்களை உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். எங்கள் குடும்பங்களில் ஏற்படும் சிறுசிறு பிரச்சனைகளில் நாங்கள் மனமுடைந்து போகாமல் உமது அன்பையும் ஆசீரையும் நாடி சமாதானத்துடன் வாழும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. **இளையோருக்காக மன்றாடுவோம்:** எம் இளையோர் கிறிஸ்துவின் வாழ்வினைப் பின்பற்றித் தங்கள் சொல்லிலும் செயலிலும் கிறிஸ்துவை வெளிப்படுத்தும் கண்ணாடிகளாக விளங்கி வாழ்வில் உயர, நல்ல அறிவாற்றல், அடக்கம், பொறுமை ஆகிய பண்புகளைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. **நாடு நலம் பெறுவதற்காக மன்றாடுவோம்:** நீதியின் தெய்வமே, நாடு செழிக்க மக்கள் மகிழ்வுடன் வாழ, நீர் வளம் பெருக, நல்ல விளைச்சல் கண்டிட, ஏற்ற நேரத்தில் தேவையான மழையினைப் பொழிந்து இயற்கை வளம் செழித்து மக்கள் நலமோடும், வளமோடும் வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 13.10.2018 அருளாளர் அலெக்சாண்டிரியா மரியா தாகோஸ்தா திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

அலெக்சாண்ட்ரீனா 1904ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள ஓபோர்ட்டோ மாவட்டத்தில் பலசார் என்னும் ஊரில் அன்பும், ஊக்கமும் கொண்ட உழைப்பாளி குடும்பத்தில் பிறந்தார். இவர் தனது 14ம் வயதில் தனது கற்பைக் காத்துக்கொள்ள, மூன்று முரடர்கள் பிடியிலிருந்து விடுபட இரண்டாம் மாடியிலிருந்து சன்னல் வழியாக கீழே குதித்தார். அவ்வாறு விழுந்ததன் காரணமாக ஏற்பட்ட காயங்களினால் தாங்க முடியா துன்பத்திற்குள்ளாகி உடல் முழுவதும் பலவீனமடைந்து நடக்க இயலாமல் 30

ஆண்டுகளாக படுக்கையிலேயே வாழ்வை வாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார். தனது துன்பங்களையும், வேதனைகளையும் இறைவனிடம் ஒப்புக்கொடுத்தார்.

இவர் 1938ம் ஆண்டு முதல் 1942ம் ஆண்டு வரை எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் இயேசுவின் பாடுகளில் பங்கு பெறும் பேற்றினைப் பெற்றார். உலக முழுமையும், மரியாளின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கும்படி திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதரை அணுகி இவர் பணிவோடுக் கேட்டுக் கொண்டார். அவருடைய விண்ணப்பத்திற் கிணங்க திருத்தந்தை 1942ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாள், உலக முழுமையும் மரியாளின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணித்தார். 1942ம் ஆண்டு மார்ச் 29ம் நாளிலிருந்து இறக்கும்வரை, 13 ஆண்டுகளாக நற்கருணை மட்டும் உண்டு உயிர் வாழ்ந்தார். அருட்திரு உம்பர்த்தோ உதவியுடன் சலேசிய உடனுழைப்பாளராக மாறினார். இவர் தனது குறிப்பேட்டில், "சலேசிய உடனுழைப்பாளர் என்ற நிலையில் உலகிலுள்ள எல்லா சலேசியருடனும் இணைந்து எனது துன்பங்களை இளைஞர் பணிக்காக ஒப்புக்கொடுக்கிறேன். நான் சலேசிய சபையை அதிகமாக அன்புச் செய்கிறேன்", என்று எழுதி வைத்திருந்தார்.

1955ம் ஆண்டு அக்டோபர் 13ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். "மனிதரின் மீட்பே இறைவனின் மகிமை", என்ற இலக்கோடு தனது வாழ்வை அர்ப்பணித்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2004ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். நாமும் இவரின் விசுவாசத்தையும் ஆண்டவரிடம் இவர் வைத்திருந்த பற்றுறுதியையும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

**பதில்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

1. தூய்மைக்கு இலக்கணமாக வாழ்ந்த அலெக்சாண்டிரீனாவைப் போன்று திருஅவையினர், கிறிஸ்துவின் அன்பு நெறியிலும், ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையிலும் தூய உள்ளம் கொண்டு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இன்றைய இளைய தலைமுறையினர் அனைவரும் உண்மையான இறை நம்பிக்கையில் ஊன்றி வாழவும், இலட்சியத் துணிவோடு வாழ்வின் போராட்டங்களைச் சந்திக்கவும், நேர்மையான உள்ளத்தோடு பிறர் சேவையில் ஈடுபடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. நாங்கள் அனைவரும் இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கெடுப்பதன் வழியாக புனித வாழ்வுக்கு ஏற்றவர்களாகவும், நற்கனி தருபவர்களாகவும் வாழ்ந்து, இறையாட்சிக்குச் சான்றுப் பகர அருள்பொழியுமாறு, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





## 14.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 28ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. சா.ஞா. 7: 7-11 II. எபி. 4: 12-13 மாற்கு 10: 17-30

இறைஇயேசுவில் பிரியமான இறை சமூகமே, இன்றைய வாசகங்கள் அனைத்தும், அழியும் செல்வத்தின்மேல் ஆசை வைத்து நாம் அழியாத வாழ்வை இழக்கக் கூடாது என்பதையே சுட்டிக் காட்டுகின்றது. இன்றைய முதல் வாசகத்தில் ஞானம் என்பது நம்மீது தூய ஆவியாரின் தூண்டுதலால் பொழியப்படும் ஒன்று. அதனோடு ஒப்பிடும்போது பொன்னும், வெள்ளியும், விலையுயர்ந்த மாணிக்கக் கல்லும் சிறிதளவு மணலுக்கு சமம் என்றும், ஞானத்தின் சுடரொளி மங்காது என்றும், அளவற்ற செல்வத்தை எல்லா குணநலன்களோடும் அது ஏந்தி வரும் என்றும் சொல்லப்படுகின்றது. இரண்டாம் வாசகத்தில், இந்த இறைஞானம் உள்ளவர்கள் இறை வார்த்தையால் நிரப்பப்படுவார்கள். அவர்கள் அனைத்தையும் இறை வார்த்தையின் ஒளியில் சீர்த்தூக்கிப் பார்ப்பார்கள் என்றும் கூறுகின்றது.

மேலும் நற்செய்தியில் ஆண்டவர் இயேசு செல்வத்திற்கும், இறைவனுக்கும் ஒருவர் பணி செய்ய முடியாது. நீ செல்வத்தினனாய் இருப்பது தவறல்ல, ஆனால் அந்த செல்வம் எதற்கு பயன்படுகிறது? தனி ஒருவனுக்கா அல்லது பிறரின் பசியைப் போக்கவா? பணம் படைத்தவனாக இருந்தாலும் ஏழ்மை உருவாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். செல்வம் நமக்கு ஆணவத்தை அதிகப்படுத்தாமல், தீமைக்கு அழைத்துச் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். செல்வம் நமக்குத் தேவை. ஆனால் செல்வமே வாழ்வாகிவிடாது. செல்வத்திற்கு நாம் அடிமையாகிவிடாமல் செல்வத்தை நாம் அடக்கியாள அருள் வேண்டுவோம். செல்வத்தால் வரும் சுற்றங்களைவிட தெய்வமே நீரே துணை என்று இறைவன் பதம் நாடுவோம். செல்வத்திற்கும், இறைவனுக்கும் நாம் ஒரே நேரத்தில் பணி செய்ய முடியாது. செல்வத்தைத் துறக்க இயலாதவர், இயேசு கிறிஸ்துவின் சிறப்பு அழைப்பை ஏற்க இயலாதவர் என்றே கருதப்படுகிறார். இறுதியாக அளவற்ற சொத்து சுகங்கள் நம்மைக் காக்கும் என்ற சுயநலத்தோடு வாழாமல், இறைவனை நம்பி வாழும் மனதினைப் பெறுவோம். அதன்மூலம் அவரது அன்பையும் அருளையும் பெறுவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஞானத்தின் தொடக்கமே இறைவா, உம் வழிவரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொது நிலையினர் ஆகிய அனைவரும் அழைக்கப்பட்டவர்கள், கட்டளைகளை மதித்துப் பணிச் செய்ய வந்தவர்கள் என்பதை நினைவில் பதித்து சிறப்பாக, செயல்படக் கூடிய மன உறுதியையும், தூய ஆவியாரின் ஞானம் என்னும் சுடரொளியையும் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எளிமையின் தேவனே இறைவா, ஏழ்மையின் துயரத்தில் வாழும் எளிய மக்களின் மனதில் செல்வம் நிலையானது அல்ல, உம் அன்பு ஒன்றே நிலையானது என்பதை உணர்த்தி, உம்மில் என்றும் நிறைவுகாண வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் ஊற்றே இறைவா, செல்வந்தர்கள் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது என்ற உமது வார்த்தைகளுக்குச் செவிமடுத்து, செல்வம் உடையோர் நமது மீட்பின் பயணத்திற்கு செல்வம் உதவாது என்பதை உணர்ந்து அதை அனைவருக்கும் பகிர்ந்து வாழும் மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. குறைத் தீர்க்கும் நிறைமதியே இறைவா, பலவித விலையேற்றங்களால் பாதிக்கப்படும் நடுத்தர மக்களை மனதில் இருத்தி, நாட்டினை ஆளும் பொறுப்பாளர்கள் விலையேற்றத்தைக் குறைக்கவும், அதற்கான திட்டங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு அனைவருக்கும் நன்மை பயக்கும் தீர்மானங்களை நிறைவேற்றவும் வேண்டிய அருளைப்பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.

## 15.10.2018 புனித அவிலா தெரேசா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

இறையன்பில் இனியோரே, நம் தாய் திருஅவையானது இன்று "அன்பே வாழ்வு" என்று வாழ்ந்த தூய அவிலா தெரேசாவின் விழாவைக் கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இவர் ஸ்பெயின் நாட்டில் அவிலா என்ற இடத்தில் 1515ம் ஆண்டு மார்ச் 28ம் நாள் பிறந்தார். 14வயது நடக்கும்போதே தாயை இழந்த இவள் நோயினால் துன்புற்று தூய யோசேப்பின் அருளால் குணமடைந்தாள். கார்மேல் சபையில் சேர்ந்த இவள் இறைவனின் துணையால் பல சீர்த்திருத்தங்களை கொண்டு வந்தார். ஒருநாள் செபம் செய்து கொண்டிருந்தபோது, இனி நீ மனிதர்களிடம் உரையாட வேண்டும், கடவுளின் தூதர்களிடம் உரையாட வேண்டும் என்று இறைவன் கூறக்கேட்டார். இவர் பல செபதவ முயற்சிகளால் 32 புதிய துறவற இல்லங்களை தோற்றுவித்தார். அன்பு மட்டுமே அனைத்திற்கும் ஈடாகிறது என்று மொழிந்து வாழ்ந்த அவிலா தெரேசா 1582, அக்டோபர் 4 அன்று இறைவனடி சேர்ந்தார். எனவே நாமும் அன்பை மட்டுமே வாழ்வாக கொண்டு பிறரிடம் அன்பு கொண்டு வாழும் வரத்தைக் கேட்டு இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, நீர் தேர்ந்துக்கொண்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் உமது அன்பை வாழ்வாக்கி அதன்மூலம் மக்களை அன்பின் பாதையில் வழிநடத்திட வேண்டிய வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





2. அன்பு தந்தையே இறைவா, பல்வேறு பாவச் சூழல்களில் உழன்று கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் உமது பேரன்பின் மேன்மையை உணர்ந்து மனந்திரும்பவும், தூய வாழ்வு வாழ்தற்கான மன உறுதியை பெறவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அருளே உருவான எம் இறைவா, தூய அவிலா தெரேசாவைப்போல இங்கு கூடியிருக்கும் நாங்கள் உம்மீது அளவில்லா அன்பும், நம்பிக்கையும் கொண்டு தன்னலமற்ற சேவையில் அவரைப்போன்று தொண்டுள்ளம் கொண்டவர்களாய் வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 17.10.2018 அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்றைய திருவிழா நாயகர் புனித இஞ்ஞாசியார் உரோமையில் ட்ரேஜன் காலத்தில் விண்ணகம் சென்றவர். இவர் மனம்மாறி நற்செய்தியாளரான புனித அருப்பரின் சீடரானார். புனித இராயப்பர் (பேதுரு) இவரை அந்தியோக்கியா நகரின் ஆயராக்கினார். 40 ஆண்டுகள் திருஅவையை ஆண்டு வந்தார். இயேசு கிறிஸ்துவுக்காகத் தமது உயிரையிழக்க ஆசித்தார். அரசர் இவரைப் பிடித்து நீ யார் என்று இவரைக் கேட்டார். அதற்கு இவர் "கடவுளை என்னுள் கொண்டு செல்கிறவன் நான்" என்று பதில் அளித்தார். இவரை விலங்கிட்டு உரோமைக்குக் கொண்டு போய் காட்டு மிருகங்களுக்கு இரையாகப் போட வேண்டுமென்று அரசன் உத்தரவிட்டான். உரோமைக்குப் போகும் வழியில் 7 சுற்றுமடல்களைப் பல்வேறு திருஅவைகளுக்கு எழுதி அனுப்பினார். "கிறிஸ்தவன் தனக்காக வாழ்வதில்லை, அவன் கடவுளுக்கு மட்டுமே சொந்தமானவன்" என்று கூறுவார். நம்முடைய உடல் கடவுளின் ஆலயமென்பதால் இவ்வுடலைத் தூய்மையாக வைத்திருப்பது அவசியமென்பதை வலியுறுத்துகிறார். பிளவுகளைத் தவிர்த்து ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றும், இயேசு கிறிஸ்து, தந்தையின் சித்தப்படி வாழ்ந்ததுபோல நாமும் இறையேசுவைப் போல வாழ வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார்.

இவரை பசித்திருக்கும் சிங்களுக்கு இரையாக்க ஆணைப் பிறந்ததை அறிந்து, "எனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் வன விலங்குகள் என்னிடமுள்ள சிறு எலும்புகளைக் கூட விடாமல் உண்டு கல்லறை கட்டட்டும். நெருப்போ? சிலுவை மரமோ? எனதுடல் நொறுக்கப்படும் நிலையோ? ஆண்டவரிடம் போவதற்கு இது உதவுமாயின் நான் அன்புடன் ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். கி.பி. 107ம் ஆண்டில் சிங்கங்களுக்கு உணவாக ஆக்கப்படும் நேரத்திலும் தன்னுடைய உயிருக்காக இயேசு கிறிஸ்துவை மறுதலிக்காமல் தைரியத்தோடும், உற்சாகத்தோடும் கிறிஸ்துவுக்காகப் பலியானார். இவரைப்போல நாமும் நமக்கு எவ்விதமான துன்பங்கள், சோதனைகள் வந்தாலும் இயேசு

கிறிஸ்துவையும், திருஅவையையும் விட்டு விலகாமல் என்றும் இயேசுவின் அன்பில் நிலைத்திருக்கும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவரும் தாங்கள் செய்துகொண்டிருக்கும் இறைப்பணியை ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் செயலாற்றிடத் தேவையான ஆன்ம சரீர நலன் பெற்று உம் பணியைச் சிறப்பாகச் செய்திட தூய ஆவியின் வல்லமையைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் ஊற்றே இறைவா, இன்றைய சூழ்நிலையில் ஏழை, எளிய மக்களுக்கு ஏற்படும் அவலநிலைகள், ஏமாற்றங்கள், அடிமை நிலை போன்ற இன்னல்களிலிருந்து உமது கனிவிரக்கம் அவர்களைக் காக்கவும், இனிவரும் நாட்களில் வாழ்வில் முன்னேற்றம் காணவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, உம்மிடம் நம்பிக்கையோடு செபிக்கும் ஒவ்வொருவரையும் உம் வல்லமையான கரத்தால் ஆசீர்வதித்தருளும். நம்பிக்கையோடு காத்திருப்போரின் எண்ணங்கள், ஏக்கங்கள், எதிர்ப்பார்ப்புகள், தேவைகள் அனைத்தையும் உம்மாலே நிறைவேற்றப்பட்டு அதனால் அனைவரும் வாழ்வில் மகிழ்வினைச் சுவைக்க உமது அருளிரக்கத்தையும், ஆசீரையும் நிறைவாகப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 18.10.2018 புனித லூக்கா, நற்செய்தியாளர் விழா — திருப்பலி

**முன்னுரை** — திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இறைஇயேசுவின் இறையாட்சிப் பணியில் பங்குக்கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளே, நமது அன்னையாம் திருஅவை மூன்றாம் நற்செய்தியையும், திருத்தூதர் பணியையும் எழுதிய நற்செய்தியாளர் புனித லூக்காவின் விழாவை இன்று கொண்டாட அழைக்கின்றது. இவர் சிரியா நாட்டின் அந்தியோக்கியா நகரில், விசுவாசமற்ற பெற்றோருக்குப் பிறந்த புறவினத்தார். இவர் மருத்துவராகப் பணியாற்றியவர் (கொலோ 4:14) நல்ல ஓவியரும் கூட. சென்னை புனித தோமையார் மலையில் உள்ள அன்னை மரியாவின் திருஉருவப்படம் இவர் கைப்பட வரையப்பட்டதாகும். "அன்புமிக்க மருத்துவர்" என புனித பவுலடியாரால் புகழப்பட்டவர். புனித பவுலுக்கு உதவியாக, அவரது 2ம் 3ம் மறைபோதக பயணங்களில் செயல்பட்டுள்ளார். இவரது நற்செய்தி இறைவனின் இரக்கத்தையும், ஏழைகளுக்கு இயேசுவின் சிறப்புப் பணியையும் விளக்குகிறது.

இவரது நற்செய்தியில் தூய ஆவியானவரைப் பற்றியும், செபத்திற்கு இயேசு தரும் முக்கிய இடம் குறித்தும் அறிகின்றோம். இவரது நற்செய்தி





"மகிழ்ச்சியின் நற்செய்தி" ஆகும். இது கி.பி. 70-85ம் ஆண்டுக்குள் எழுதப்பட்டதாகும். "ஆண்டவரை என் உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது" என மரியா பாடிய புரட்சிப் பாடலைப் புனித லூக்கா பதிவு செய்துள்ளார். இயேசு கற்பித்த செபத்தைப் புனித லூக்காவும் புனித மத்தேயுவும் குறிப்பிட்டுள்ளனர். பிதாவின் இரக்கத்திற்கு மிகப் பொருத்தமான உவமை "ஊதாரி மகன்" உலகம் முழுவதும் ஏற்றுப் போற்றக் கூடிய உவமையாகும். இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்தார் என்னும் கருத்து முதன்மைச் செய்தியாக விளங்குகின்றது. எனவே, பகிர்ந்து உண்ணும் திருவிருந்தில் தூய ஆவியால் நிரப்பப் பெற்று, நாம் மன்றாடுவதில் நிலைத்திருக்கவும், வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியோடு வாழவும் நற்செய்தியை எடுத்துரைக்கும் ஆற்றலைப் பெறவும் வரம் வேண்டி பக்தியுடன் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எம் திருஅவையை விசுவாசப் பாதையில் வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், பொதுநிலையினர் அனைவரும் வறுமையும், ஏற்றத்தாழ்வும் மிகுந்த இச்சமுதாயத்தில் அன்புறவும் பகிர்தலும் இருந்தால் எல்லாருக்கும் வாழ்வு பிறக்கும் என்ற படிப்பினையை எடுத்தியம்பி அதன்படி வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் தெய்வமே இறைவா, நாட்டுத்தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், தங்களின் சுயநலம் துறந்து ஏழை, எளிய மக்களுக்கு பணிபுரியும் நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, மரணதண்டனையை அறவே ஒழிப்பதற்கு திருஅவை முயற்சி எடுக்கிறது. அடிப்படையில் மனித மாண்பு எந்தச் சூழலிலும் சிதைக்கப்படக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளது. ஏனெனில், மனம் திருந்தும் வாய்ப்புகள் அதிகமுண்டு. எனவே, கொடூரமான, மனித மாண்பிற்குத் தகுதியில்லாத சட்டம் இயற்றும் மக்கள் தலைவர்களுக்குத் தேவையான இரக்க ஞான மாண்பைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 29ம் ஞாயிறு — திருப்பலி

**முன்னுரை** — திரு. விக்டர்

I. எசா. 53: 10-11 II. எபி. 4: 14-16 மாற்கு 10: 35-45

அன்புடையீர், நமது திருமறை ஆண்டின் 29ம் ஞாயிறு திருப்பலிக்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றேன். இயேசுவின் பணிவாழ்வு குறித்து இத்திருப்பலியில் தியானிக்க இருக்கின்றோம். இறைமகன்

இயேசு துன்பப்படுவதற்கென்றே இவ்வுலகிற்கு வந்தார். நம்முடைய தீச்செயல்களை அவர் சுமந்து (எசாயா 52:11) நாம் அனுபவிக்க வேண்டிய பாடுகளையும் துன்பங்களையும் அவர் ஏற்றுக்கொண்டு நம்மை இறைத்தன்மைக்கு உருமாற்றும் செய்யும் பணியைச் செவ்வனே செய்து முடித்தார் (உரோ.8:29). அவர் சிந்திய இரத்தத்தினால் நாம் விலைக்கொடுத்து வாங்கப்பட்டுள்ளோம் (திப. 20:28).

"பாடுகள் இல்லாமல் மாட்சியில்லை, துன்பம் இல்லாமல் இன்பமில்லை, சிலுவை இல்லாமல் சீடத்துவமில்லை, மரணம் இல்லாமல் உயிர்ப்பு இல்லை". இவைகள் ஒருபக்கம் இருக்க, மறுபக்கமோ மாட்சி, அரசாட்சி, அவரருகில் இடம். இவற்றுள் நமது மனித மனம் இயல்பாகவே மாட்சியையும் சுகத்தையும் விரும்புகிறபடியால் நாம் யாவரும் நிலைவாழ்வின் சுகங்களையே எதிர்நோக்கியிருக்கிறோம். அதனால்தான் யாக்கோபும் யோவானும் ஆண்டவரது வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் இடம் வேண்டினார். இந்த மாட்சிமையை அடைய இயேசு எதையெல்லாம் இழந்தார் என்பதை அவர்கள் அறியவில்லை. இயேசு தனது மாட்சியைத் துறந்து ஏழை மாட்டுக்குடிலில் எளிமையாகப் பிறந்தார். கந்தைத் துணிகளில்தான் அவரைப் போர்த்தினர்.

அவருக்கு காணிக்கைச் செலுத்த இளங்கன்றுக்குட்டியோ, ஆடோ இல்லாத நிலையில் இரண்டு புறாக்களை மட்டுமே காணிக்கையாகக் கொடுக்கும் அளவுக்கு அவர் எல்லாம் இருந்தும் ஏழையாகப் பிறந்தார். எதையும் செய்ய வல்லமை இருந்தும் எதையும் செய்ய இயலாதவர் போல சிலுவையில் காணப்பட்டார். தூய்மையே உருவானவர் பாவிகளின் மத்தியில் பாவியைப்போல காணப்பட்டார். கிறிஸ்துவ வாழ்வு என்பது அதிகாரம் செலுத்தும் வாழ்வன்று. மாறாக அன்பு செலுத்தும் வாழ்வு, அடக்கியாளும் வாழ்வல்ல, மாறாக, பண்புடனும் பணிவுடனும் பணிசெய்யும் வாழ்வு. கிறிஸ்துவோடு மாட்சியில் பங்கு பெறுவதற்கு மட்டுமல்ல. மாறாக, கிறிஸ்துவோடு பாடுகளில் பங்கு பெறவும் நமக்கு அருளப்பட்டுள்ளது (பிலி. 1:25) என்பதை உணர்ந்தவராய் பணிசெய்து வாழ உறுதியேற்போம். இதற்கான வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. பணிவாழ்வை கற்றுத்தந்த இறைவா, கத்தோலிக்க திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவருக்கும் உமது ஆசியை வழங்குவீராக. இவர்கள் தமது பணிவாழ்வில் பிறருக்கு எடுத்துக்காட்டான வாழ்வு வாழ தூய ஆவியானவர் இவர்களை என்றும் வழிநடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. பிறருக்குத் தொண்டாற்ற அழைப்பு விடுத்துள்ள இறைவா, பிறருக்குத் தொண்டு செய்வதன் மூலம் கடவுளுக்கே தொண்டு செய்கிறோம்





என்பதை எங்களுக்கு உணர்த்தினவரே உமக்கு நன்றி. எங்களது பணி வாழ்விலும், தொண்டு வாழ்விலும் சோர்ந்து போகாது உழைக்க, துன்பங்கள்வரினும் அவற்றை ஏற்றுக்கொண்டுப் பணி வாழ்வைத் தொடர்ந்து செய்ய வேண்டிய ஆற்றலைத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. நீதியின் நாயகனே இறைவா, எமது தாய்நாட்டை ஆளும் தலைவர்களையும் தமிழ்நாட்டையாளும் தலைவர்களையும் கண்ணோக்கும். ஆளும் அதிகாரத்தை நீர்தான் வழங்கியுள்ளீர் என்பதை அவர்கள் உணர்ந்து உண்மைக்கும், நீதிக்கும், நியாயத்திற்கும் உழைக்கிறவர்களாக வாழும் நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. பணிபெற அன்று பணிபுரியவே வந்தேன் என்றுரைத்த இறைவா, நற்செய்தி பணிபுரிவது என்பது மிகவும் சவாலானது என்பதை உணர்ந்து துன்பங்களை ஏற்று உம்பணிபுரியத் தேவையான துணிச்சலையும், ஆழ்ந்த நம்பிக்கையையும் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.10.2018 திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறைஇயேசுவில் அன்புள்ள சகோதரிகளே, சகோதரர்களே, இன்று திருஅவையானது தூய இரண்டாம் ஜான்பால் திருத்தந்தை அவர்களின் விழாவைக் கொண்டாட அழைக்கிறது. போலந்து நாட்டில் வோடோவைஸ் நகரில் கரோல் மற்றும் எமிலியா கசோரஸ்கா ஆகியோரின் இரண்டாவது மகனாக 1920 மே 18 அன்று நமது புனிதர் பிறந்தார். இவர் தனது தாயை ஒன்பது வயதிலும், அண்ணனை 13 வயதிலும் இழந்தார். தாய் மற்றும் தந்தை இருவரிடமும் இருந்து இறைப்பக்தியைக் கற்றுக் கொண்ட நம் புனிதர் நிறைய மொழிகளைக் கற்று அறிவுடையவராகத் திகழ்ந்தார். இறையழைத்தல் உள்ளத்தில் ஊற்றெடுத்தபோது புனிதர் 1942ம் ஆண்டு குருமடத்தில் சேர்ந்தார். 1946 நவம்பர் முதல் தேதி குருத்துவ அருள்பொழிவு பெற்று, பின்பு துணை ஆயர், கர்தினால் என்ற நிலையை அடைந்து 1978, அக்டோபர் 16ல் திருத்தந்தையானார். இவருக்கு பெற்றோர்கள் வைத்த பெயர் ஜோசப் வோய்த்திவா திருத்தந்தையானவுடன் நம் புனிதர் இரண்டாம் யோவான் பவுல் என்னும் பெயரைத் தேர்வு செய்தார்.

இவர் கருக்கலைப்பு மற்றும் சிசுக்கொலைகளை எதிர்த்தார். கருணைக்கொலை பற்றிய விவாதம் இவர் காலத்தில் எழுந்தபோது, "மனிதர் அனைவரும் மாண்புடன் சாக உரிமை உள்ளவர்கள்" என்று கூறினார். கீழைத் திருச்சபையிடம் நல்லுறவு கொள்ள பல நாடுகளுக்குப் பயணம் செய்தார். 1981, மே 13 அன்று அக்சா என்பவனால் துப்பாக்கியால் சுடப்பட்டார். இறையருளால் பிழைத்தெழுந்தார். திருத்தந்தை 2005 ஏப்ரல்

இரண்டாம் தேதி இறைவனடி சேர்ந்தார். நமது திருத்தந்தை பிரான்சிஸ் 2014 ஏப்ரல் 27 அன்று இவரைப் புனித நிலைக்கு உயர்த்தினார். உலக இளையோர் தின பாதுகாவலராக நமது புனிதர் அறிவிக்கப்பட்டுள்ளார். புனிதர் வழியாக நாமும் புனித வாழ்க்கை வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்கள் நல்ல ஆயனே இறைவா, திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருள்பணியாளர்கள், இருபால் துறவியர் மற்றும் திருத்தொண்டர்கள் அனைவரும் தங்கள் அழைத்தலின் மேன்மையை உணர்ந்து வாழ வருமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. இளையோரின் உன்னத வழிகாட்டியே இறைவா, புனித இரண்டாம் ஜான்பால் இளைஞர்கள்மேல் கொண்டிருந்த அன்பு மூலம் அவர்களை நல்வழிப்படுத்தி நிலைவாழ்வை நோக்கிய பாதையில் தடம் பதிக்கச் செய்ததுபோல புனிதர் வழியாக இன்றைய இளையோர்களும் உம்மை நோக்கி நடைபயில வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. எவ்வகைப் பேராசைக்கும் இடம் கொடாதே, என்று எச்சரித்த ஆண்டவரே, நாங்கள் இன்று பேராசையின் உச்சக்கட்டத்தில் இயற்கையை உருக்குலைத்து, உடன் வாழ்வோரையும் ஒதுக்கி சுயநலத்துடன் வாழும் எங்கள் நிலைமாறி இறையரசின் மதிப்பீடான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை நோக்கிப் பயணிக்க இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**24.10.2018 அருளாளர் அலோசியஸ் குவனெல்லா திருப்பலி**

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

அலோசியஸ் குவனெல்லா 1842ம் ஆண்டு இத்தாலி நாட்டிலுள்ள கம்போடோல்சினோ என்ற இடத்தில் பிறந்தார். கடினமாக உழைக்கவும், ஏழைகளுக்கு உதவவும் தனது சிறுவயதில் கற்றுக்கொண்டார். சவோனா என்ற இடத்தில் குருவாகவும், ஆசிரியராகவும் பொறுப்பேற்று பணியாற்றியபோது பள்ளி ஒன்றைக் கட்டினார். இவர் கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தை ஆரம்பித்தப் பிறகு 1875ம் ஆண்டு புனித ஜான் போஸ்கோவைச் சந்தித்து, அவரோடு இணைந்து பணிபுரிந்தார். மூன்று வருடங்களாக இவர் சலேசியராக இருந்தபொழுது தூரினில் உள்ள புனித அலோசியஸ் ஆரட்டரியிலும், குனெயோவில் டிரினிட்டா என்ற இடத்தில் நீப்ராஸ் கல்லூரியிலும் இயக்குநராகவும் பணியாற்றினார். தனது ஆயரால் மீண்டும் மறைமாவட்டத்திற்கு அழைக்கப்பெற்ற இவர், சோன்டியோவில் உள்ள டிரவோனா என்ற இடத்தில் ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு





பள்ளியை ஆரம்பித்தார். ஆனால் அரசாங்க அதிகாரிகளின் தொல்லையால் பள்ளியை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

1886ம் ஆண்டு கோமோ என்ற இடத்தில் இறை பராமரிப்பு இல்லத்தை (House od Divine Providence) நிறுவி திரு இருதய ஆண்டவரின் கோயிலையும் கட்டினார். அவர் இளைஞர்களுக்குக் கற்பிக்கவும், இளம் குற்றவாளிகளையும், முதியோர்களையும் பராமரிக்கவும், இறை பராமரிப்பு புதல்வியர் சபையை (Dauthers of Divine Providence) நிறுவினார். இதே நோக்கத்திற்காக "அன்பின் ஊழியர்" சபையையும் (Servants of Charity) நிறுவினார். மேலும் 1913ம் ஆண்டு இறப்போருக்கு ஆறுதலாக இருக்க, புனித சூசையப்பரின் பக்த சபையையும் (Pious Union of the Passing of St. Joseph) ஏற்படுத்தினார். இவர் 1915ம் ஆண்டு அக்டோபர் 24ம் நாள் கோமோ என்ற இடத்தில் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் 1964ம் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இறைவனின் அயராது உழைப்பை போற்றுவோம். நாமும் இறைவனிடம் ஏழை எளியவர்களுக்கு பணிபுரியும் வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

**பதில்: இரக்கம் மிகுந்த தந்தாய், எமது வேண்டுதலைக் கேட்டருளும்.**

1. கைவிடப்பட்டோருக்கும், சமூகத்தின் விளிம்பில் இருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் வாழ்வு கொடுக்க திருஅவைத் தலைவர்கள் தங்களையே அர்ப்பணிக்க முன்வர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நாட்டின் பல்வேறு அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் பிறரன்புப் பணியை மையமாகக் கொண்டு சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகப் பாடுபடவும், தாங்கள் எடுக்கும் முயற்சிகளும் திட்டங்களும் அனைத்து மக்களையும் குறிப்பாக ஏழை, எளியவர்களையும் சென்றடையவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இளையோர் அனைவரும் தன்னலம் மறந்து பிறர்நலம் பேணித் தாராள மனதுடன் முன்வந்து உதவி தேவைப்படுவோருக்குப் பணி செய்யவும், புதியதோர் சமுதாயம் படைக்கத் துணிவைப் பெறவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. திருஅவையின் வளர்ச்சியில் உலகம் ஒரு குடும்பமாக வளர அருளாளர் அலோசியஸ் குவனெல்லாவின் பணியில் பங்கெடுக்கும் அனைவரும் தங்களது அன்புப் பணிக்கு அவரை முன்மாதிரியாகக் கொண்டு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாறடுகிறோம்.

## 28.10.2018 ஆண்டின் பொதுக்காலம் 30ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. எரே. 31: 7-9 II. எபி. 5: 1-6 மாற்கு 10: 46-52

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, இன்று நாம் பொதுக்காலம் 30ம் ஞாயிறு திருப்பலியை கொண்டாட அழைக்கப்பட்டுள்ளோம். இன்றைய இறைவார்த்தைகளில் இறைவனின் இரக்கம், பராமரிப்பு, அன்பு வெளிப்படுவதை தியானிக்க நம்மை திருஅவை அழைக்கின்றது. "அழுகையோடு அவர்கள் திரும்பி வருவார்கள், ஆறுதலளித்து அவர்களை நான் அழைத்து வருவேன். நீரோடைகள் ஓரமாக நான் அவர்களை நடத்திச் செல்வேன். இடறி விழாது சீரான வழியில் அவர்களை நடக்கச் செய்வேன். ஏனெனில், நான் இஸ்ரயேலின் தந்தை" (எரே. 31:9). ஆம் நம் கடவுள் நம்மை ஆதரித்து வழிநடத்தும் உன்னதத் தந்தை. இந்த நம்பிக்கைத்தரும் வார்த்தைகளை முதல் வாசகத்தில் காண்கிறோம். அதே இறைவன் புதிய ஏற்பாட்டில் தம் ஒரே திருமகனின் வழியாக இன்று நம்மை அழைக்கிறார். நாம் நமது துன்பங்கள் துயரங்களிலிருந்து விடுபட்டு நேரிய வாழ்வு வாழ நமக்குப் பக்கபலமாக இருக்கிறார்.

பார்வையிழந்த பார்த்தலமேயு நம்பிக்கையிழந்து வாழ்வையிழந்து வழியோரம் அமர்ந்து பிச்சை கேட்கிறான். இயேசுவின் காலடி ஓசை அவனுக்கு நம்பிக்கைத் தருகிறது. பலருடைய விழிகள் அவனைப் பார்க்கத் தவறியபோது, இயேசுவின் விழிகள் மட்டும் அவன்மீது பதிந்தன. தனக்குப் பாதுகாப்பாக இருந்த மேலாடையைத் தூக்கி எறிந்துவிட்டு இயேசுவில் நம்பிக்கைக் கொண்டு அவரை நாடி ஓடி வருகிறான். இயேசுவின் கருணை உள்ளமும் அவனது விடாமுயற்சியும் புதிய விடியலாகின்றன. பார்வைப் பெறுகிறான் ,புதிய வாழ்வை அடைகிறான். பெற்ற வாழ்வைப் பிறரோடுப் பகிர்ந்துக்கொள்ள இயேசுவைப் பின்தொடர்ந்தது மட்டுமல்லாமல், நற்செய்தியின் தூதுவனாகவும் மாறுகிறார். தன்னம்பிக்கையை நமதாக்கிக் கொள்ள வேண்டும், தடைகளைக்கண்டு, துவண்டுவிடாமல் இறுதிவரை விடாமுயற்சியோடு போராட வேண்டும். இதனை மனதில் கொண்டு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தந்தையே இறைவா, உம்மால் தேர்ந்துக்கொள்ளப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்களின் அழைப்பின் வல்லமையை உணர்ந்தவர்களாய் தங்களுக்கு ஏற்படும் அனைத்து சவால்களையும் இன்னல்களையும் உமது ஆற்றலோடு எதிர்கொள்ள உமதருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்புத்தந்தையே இறைவா, இதயச் சுமைகளோடும் உள்ளத்துக் கவலைகளோடும் எம்மிடம் ஆறுதல் தேடி வரும் நண்பர்களிடம் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்ற அன்பான வார்த்தையை சொல்லி அவர்களுக்கு ஆறுதலை வழங்கும் நல்ல பண்பினை எமக்கருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. உள்ளம்உடைந்தோர்க்குஊக்கத்தையும், பலவீனர்களுக்கு பலத்தையும், நோயுற்றோர்க்குச் சுகத்தையும், நம்பிக்கையிழந்தவர்களுக்கு நம்பிக்கையுமாக இருப்பவரே, இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு இருக்க இடமின்றி தவிக்கும் உம் பிள்ளைகளை கருணைக்கொண்டு பாதுகாத்து வாழ்வுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்தருள நல்லுள்ளம் படைத்தவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பின் அடைக்கலமாவரே, நீர் எங்களோடிருந்து பாதுகாத்து பராமரித்து வருவதை நாங்கள் உணராது, உம்மைவிட்டு வெகுதொலைவில் சென்றுவிட்டோம் என்பதை உணர்ந்து,உம்மில் ஆழ்ந்த நம்பிக்கையும், அன்பும் கொண்டவர்களாக நாங்கள் உம்மைப்பற்றிக்கொள்ளும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.





## 29.10.2018 அருளாளர் தொன் மைக்கேல் ரூவா திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

மைக்கேல் ரூவா 1837ம் ஆண்டு ஜூன் 9ம் நாள் தூரின் நகரில் பிறந்தார். 1852ம் ஆண்டு வல்தோக்கோவில் இருந்த தொன் போஸ்கோ நடத்திய ஆரட்டரியில் சேர்ந்தார். இரண்டு வருடம் கழித்து தொன் போஸ்கோ சலேசிய சபையை எவ்வாறு உருவாக்குவது என்று முதலில் இவரிடம் கலந்து ஆலோசித்தார். இவர் 1855ம் ஆண்டு மார்ச் 25ம் நாள் சலேசிய சபையில் சேர்ந்து, 1860ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார். அதன்பின் தொன் போஸ்கோவிற்கு உறுதுணையாக இருந்து 1865ம் ஆண்டு அவருக்கு உதவியாளராகப் பொறுப்பேற்றார். தனது பணியைச் சிறப்பாகச் செய்ததாலும், 1884ம் ஆண்டு திருத்தந்தை 13ம் சிங்கராயர் இவரை தொன் போஸ்கோவிற்கு அடுத்ததாக சலேசிய சபைத் தலைவராக நியமிக்கலாம் என்று பரிந்து பேசியதாலும் 1888ம் ஆண்டு சபைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் சட்டங்களைச் சரியாக கடைப்பிடித்ததால் "வாழும் அறநெறி" (The Living Rule) என்றும், தந்தைக்குரிய பண்புகளோடு பிறரிடம் பழகியதால் "இரக்கத்தின் தலைவர்" (Sovereign of Kindness) என்றும் இவரை அழைத்தனர். தனது அறிவுக் கூர்மையாலும், தொலைநோக்குப் பார்வையாலும் மாணவர்களுக்கு உடற்பயிற்சி, தொழிற்பயிற்சி, வணிகப் பயிற்சி ஆகியவற்றிற்கான பள்ளிகளை ஆரம்பித்து அவர்கள் தங்குவதற்கு இல்லங்களைக் கட்டினார். சலேசியர்களின் எண்ணிக்கை அதிகமானவுடன் உலகெங்கும் சலேசியர்களை அனுப்பி திருத்தூதுப்பணியைச் செய்ய

ஊக்குவித்தார். இவர் 1910ம் ஆண்டு ஏப்ரல் 6ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். 1972ம் ஆண்டு அக்டோபர் 29ம் நாள் திருத்தந்தை ஆறாம் சின்னப்பரால் இவருக்கு அருளாளர் பட்டம் கொடுக்கப்பட்டது. நாமும் இப்புனிதரின் தலைமையை மதிக்கும் பண்பினையும், கொடுக்கப்படும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு திறம்படச் செய்திடும் ஞானத்தையும் அளித்திட இத்திருப்பலியில் இறைவனிடம் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

**பதில்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்**

1. அன்பின் ஆண்டவரே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தனது பிள்ளைகளின் புனிதத்தினால் திருஅவையானது தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இன்றைய நவீன உலகிலே, மக்கள் கடவுளை ஏற்க மறுத்தல், நுகர்வு கலாச்சாரத்தில் மூழ்குதல், சிற்றின்பங்களைத் தேடுதல் போன்ற சோதனைகளுக்கு இடம் தராமல் நற்செய்தி மதிப்பீடுகளின் அடிப்படையில் தங்களது அன்றாட வாழ்வினை வாழ வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இளையோர் தங்களுடைய ஆசிரியர்களின் நல்வழி காட்டுதலால் உமக்கும் அயலாருக்கும் ஏற்ற விதத்தில் ஞானத்திலும், அருளிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## செபமாலை வழியில் ஜெயம் பெறுவோம்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

மாலை... அது இறைவனின் கழுத்தில் இனமான மாலை, மணமக்கள் கழுத்தில் மணமான மாலை, மதிப்பானவர்களின் கழுத்தில் மகிழ்வான மாலை, அரசியல்வாதிகளின் கழுத்தில் அளப்பரிய மாலை, அன்பானவர்களின் கழுத்தில் அழகான மாலை, விழாக்களின்போது விற்பவனின் மாலை, வெற்றி வீரர்களின் கழுத்தில் விலைமிகு மாலை, இவைகளையெல்லாம் கழுத்தில் இடப்பட்ட மாலைகள். இங்கோ... அனைவர் கைகளிலும் தவழ்ந்திடும் அன்னை மரியாவுக்குத் தந்த அழகிய வாடாமாலை, அனைவருக்கும் அன்பு நிறைவாழ்வினை அளிக்கக் கூடிய ஆற்றல்மிகு மாலை, உள்ளம், விரல்கள், உதடுகள், சிந்தனைகளை ஒன்றுப்படுத்தக் கூடிய ஒன்றுப்பட்ட ஆற்றலை உருவாக்கும் சக்தியுள்ள உன்னதமான மாலை. அனைவரும் செபித்து பரவசமடையும் அதிசயமாலை. விண்ணகத்திற்கு இட்டுச்செல்லும் விலைமிகு மாலை, செபமாலை. ஆம், இறைவனையடைய நம்மை இட்டுச்செல்வதே செபமாலை. அஃது ஓர்





சிந்தனைச் செபம். ஆண்டவர் நமக்களித்த நற்செய்தியின் சுருக்கம்.

செபமாலை... யாரும் சொல்வதற்கு எளிது. கத்தோலிக்க மக்களாகிய நமக்கு இது ஓர் உன்னத பரிசு, திருஅவை நமக்களித்த திரவியங்களின் ஊற்றுப் பெருக்கு. ஆலயத்திலும், வீட்டிலும் அதிக நேரங்களில் சொல்லப்படும் ஒரே செபம், செபமாலை.

அன்றுமுதல் இன்றுவரை செபமாலை பொது செபமாகவும், தனிச்செபமாகவும், குடும்ப செபமாகவும் நம்மால் செபிக்கப்பட்டு வருகிறது. இதிலே சொல்லப்படும் நம்பிக்கை அறிக்கையானது, நாம் திருமுழுக்கின்போது பெற்ற உறுதிப்பாட்டைப் புதுப்பிக்கிறது, கர்த்தர் கற்பித்த செபம், இறை உறவில் வளர உதவும் செபங்களிலெல்லாம் முதன்மையான செபம். மங்கள வார்த்தைச் செபம், விண்ணையும் மண்ணையும் இணைக்க இறைவன் அனுப்பிய வானத்தூதர்களின் வாழ்த்துச் செய்தியும், அன்னைக்குப் பரிந்துரையும் அடங்கிய அற்புத செபம். செபம் முடிவில் சொல்லப்படுகின்ற செபம், மூவொரு கடவுளுக்குரிய மகிமையைத் தருகிறது. ஓ என் இயேசுவே, என்ற செபம் பாவ வாழ்வைக் கைவிட அழைக்கிறது. இவ்வாறு செபிக்கப்படுகின்ற அனைத்து மறையுண்மைகளும் இறைவனின் அன்பை உணர்ந்து மீட்பினை அடைய உதவுகின்றன.

நாம் செபமாலைச் செபிக்கும்போது அருள்நிறைந்த மரியே என்ற மந்திரத்தைத் திரும்பத் திரும்பச் சொன்னாலும் நமது சிந்தனையெல்லாம் நமதாண்டவரின் பிறப்பு, வளர்ப்பு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்பு, தூய ஆவி, மரியன்னையின் மகத்துவம் பற்றியதாகவே இருக்க வேண்டும். மகிழ்ச்சி, துக்க, மகிமை ஆகிய மூன்று மறையுண்மைகளில் தியானிக்கின்றோம். இன்னும் இந்த செபமாலை முழுமைப்பெற இயேசுவின் பணிவாழ்வை ஒளியின் மறையுண்மையின் வழியாய் தியானிக்கின்றோம். தியானிக்கப்படும் இச்செபமாலை ஒரு சக்தி மிகுந்த கருவி, வெற்றியின் சின்னம். 1213ல் பிரான்சு நாட்டிலுள்ள தூலூஸ் நகரில், அழிவின் பாதைக்கு வழிகாட்டிய ஆல்பிஜென்சியன் என்ற தப்பறையாளர்களின் கொள்கை தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. அவர்களை எதிர்த்து, கௌன்ட் சைமன் தெ மான்ட்போர்ட் குறைந்த எண்ணிக்கையிலான போர் வீரர்களைக் கொண்டு "ம்யூரே" என்னுமிடத்தில் போர் புரிந்தார். வெற்றிப் பெற்றிட நம்பிக்கையோடு அனைவராலும் செபமாலைச் சொல்லப்பட்டது, வெற்றியும் கிடைத்தது. அந்த வெற்றியின் நினைவாக ஒரு திருத்தலத்தை சைமன் தெ மான்ட்போர்ட் நன்றியோடு அமைத்தார்.

செபமாலையின் வெற்றி அதோடு நின்று விடவில்லை. 1571ல் துருக்கிய சுல்தான்களின் தலைவனான இரண்டாம் கோலிமேன் என்பவனின் மகன் இரண்டாம் செலின், உரோமாபுரி மற்றும் வியன்னாவையும் திருத்தந்தை மற்றும் பேரரசையும் தனதாக்கிக்கொள்ளத்

திட்டமிட்டு மெடிட்டேரியன் கடற் பகுதியில் லெபான்டோ வளைகுடாவில் திருத்தந்தையின் தலைமைக்குக் கட்டுப்பட்டு, அவருக்கு ஆதரவாயிருந்த ஸ்பெயின் மற்றும் வெனிஸ் கடற்படையின் தலைவன் டான் தொன் ஆப் ஆஸ்திரியாவோடு மோதினான். அப்போது உலகிலுள்ள கத்தோலிக்கர் தத்தம் கோவில்களிலும் உரோமை மக்கள் இராயப்பர் தேவாலயத்திலும் பக்தியோடும், நம்பிக்கையோடும் செபமாலைச் சொல்லிக்கொண்டு பவனியாகச் சென்றனர், வெற்றியும் கிடைத்தது. அந்த வெற்றியின் நாளாம் அக்டோபர் 7ம் தேதியை திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் "வெற்றி அன்னை" (டுயனல ழக ஏளைஉவழசல) விழாவாக அறிவித்தார். திருத்தந்தை 13ம் கிரகோரியார், இந்த வெற்றிப்போர் புரிந்துக் கிடைத்த வெற்றியன்று, செபமாலைக்குக் கிடைத்த வெற்றி என்பதால் "செபமாலை அன்னை" விழாவாக அந்த நாளைக் கொண்டாடச் செய்தார்.

இவ்விதமாய் போர் அபாய சூழலில் உலக நாடுகளிலெல்லாம் செபமாலை பக்தி சிகரத்தை அடைந்துள்ளது. போர்த்துக்கல் நாட்டில், பாத்திமா என்ற இடத்தில், லூசியா, பிரான்சிஸ், ஜெசிந்தா என்ற மூன்று சிறுவர்களுக்கு 1917ல் மே மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை, ஒவ்வொரு மாதமும் காட்சி அருளினார். ஒவ்வொரு காட்சியிலும் அவர் சொன்ன மையச் செய்தி, "செபமாலையை ஒவ்வொரு நாளும் செபியுங்கள், கடைசி ஆயுதம் செபமாலைதான். தனியாகவும், கூட்டமாகவும், செபமாலையைக் கொண்டு போராடுங்கள்" என்று வெற்றிக்கான தாரக மந்திரத்தை நமக்கருளினார். அன்னை தெரேசா எங்கு சென்றாலும் இடைவிடாது தம் கரங்களில் செபமாலையை உருட்டி செபித்துக்கொண்டே செல்வார். அதுதான் தன் பணிக்கு பலமூட்டி, பல தடைகளைத் தகர்க்கத் துணை நின்றதாகச் சொல்வார். திருத்தந்தை ஆதிரியான் "செபமாலை தீயவனின் சக்தியை விலக்கும்" என்பார். இச்சிந்தனையை மனதில் கொண்டு நாமும் நம் வீட்டிலும் செல்லும் இடங்களிலும் செபமாலைப் பக்தியைப் பரப்புவோம், அன்னையின் ஆசீரைப் பெறுவோம்.

## அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரியா தகோஸ்தா வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

போர்த்துக்கல் நாட்டின் பாலசார் என்னும் கிராமத்தில் 1904ல் பிறந்த அலக்சாண்டிரீனா வாழ்வினை இரண்டு பகுதிகளாகப் பிரித்துப்பார்க்கும் போது, 19 ஆண்டுகள் மகிழ்ச்சியாக ஆடிப்பாடிய உல்லாச வாழ்வும், 32 ஆண்டுகள் இயேசுவின் பாடுகளோடு தனது சிலுவைகளை, மகிழ்வோடு சுமந்த வாழ்வும் வெளிப்படுகின்றன. தனக்கு 6 வயதான போது மறைக்கல்வி கற்று ஏழாவது வயதில் புதுநன்மை வாங்கியவர். ஆலயங்களில் வைத்துள்ள திருச்சுரூபங்களைச் சென்று பார்ப்பது இவருக்கு மிகவும் பிடித்த ஒன்று. குறிப்பாக அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் மரியன்னை, சூசை இவர்களின் திருச்சுரூபங்களைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருப்பார்.





**இளம் புயல் :** அலெக்சாண்ட்ரீனா மிக சுறுசுறுப்பானவர், துடுக்குத்தனம் மிக்கவர். சின்ன மான் குட்டியைப்போல இங்கும் அங்கும் ஓடுவதும் ஆடுவதுமாய் இருப்பவர். அன்றாட வாழ்வில் நடக்கும் வேடிக்கை நிகழ்வுகளைக் கண்டு மகிழ்வார். விறகுக் கட்டைகளை உடைப்பதும், நீரோடைக்குச் சென்று துணிகளைத் துவைப்பதும், அவரது பொழுதுபோக்கு. "தூய்மை" என்பது அவரோடு ஒட்டிப் பிறந்த பண்பு என்றால் அது மிகையன்று. தூய்மையற்ற ஆன்மாவையும், உடலையும் இறைவன் ஒருபோதும் விரும்புவதில்லை என்பதில் உறுதியாய் வாழ்ந்தார்.

**குடும்ப பாரத்தைத் தாங்கும் சுமைத்தாங்கி :** தன் 13வது வயதில் கடுமையாக உழைக்கும் தன் தாயோடு பணிக்குச் சென்றார். தாய்க்கு நிகராக திறமையோடு பணியாற்றியதால் இவருக்கு பெரியவர்களுக்குக் கொடுக்கப்படும் அதே கூலி தரப்பட்டது. பலம் வாய்ந்தவர்களைப் போல பலுவான சோள மூட்டைகளைத் தானே தனியாகத் தூக்கிச் செல்வார்.

**செதுக்கி வைத்த அழகுச்சிலை :** அலெக்சாண்ட்ரீனாவிற்கு 14 வயது, அழகுப் பொலிவுடன் திகழ்ந்தவர், தன் தங்கையுடனும் தோழியுடனும் வீட்டில் இருந்தார். அவருக்குப் பக்கவாதம் வந்திருப்பது உறுதியானது. 19ம் வயதில் படுக்கையில் படுத்தவர் 30 ஆண்டுகளாய் படுக்கையே அவரது வாழ்வாக மாறிவிட்டது. துடிப்புடன் பளபளக்கும் அவரது மேனி பயனற்ற எலும்பும் தோலுமாக மாறி, அசைவற்ற கட்டையாக மாறியது. காலப்போக்கில் அலெக்சாண்ட்ரீனாவிற்கு தான் சுகம்பெற வேண்டும் என்பதை விட இயேசுவுக்காக, ஆன்மாக்களை மீட்பதற்காகவே தனது துயரங்களை ஒப்புக்**கொடுத்தார்.**

**இயேசுவின் திருப்பாடுகளில் அலெக்சாண்ட்ரீனா :** பாவிகளின் மனமாற்றத்திற்காகவும் உலக அமைதிக்காகவும் பயனற்ற தன் உடலை மறை உடலாக மாற்றி பலிப் பொருளாக இறைவனுக்குக் கையளித்தார். துன்பப்படுவதும் பரிகாரம் செய்வதும் அன்பின் வெளிப்பாடு என்று இயேசு அவருக்கு உணர்த்தினார். 1936ல் "எனக்காக ஆன்மாக்களைக் காப்பாற்று" என்ற இயேசுவின் குரல் அவருக்குக் கேட்டது. பங்குத்தந்தை தினமும் நற்கருணை எடுத்து வந்தார். 1938ல் தன் உடலில் இயேசுவின் பாடுகளை முதன் முதலாய் அனுபவித்தார். அதுமுதல் 1942 வரை ஒவ்வொரு வெள்ளியன்றும் 3 மணி நேரம் இயேசுவின் பாடுகளைத் தன் உடலில் அனுபவித்தார். 1942ம் ஆண்டு இவருக்கு இறுதி அருட்சாதனம் நிறைவேற்றப்பட்டது. அதுமுதல் 1955 அக்டோபர் 13ம் நாள் வரை நற்கருணை ஒன்றையே உணவாக அருந்தினார்.

**ஒரு சலேசிய உடனுழைப்பாளர் :** அலெக்சாண்ட்ரீனா 1945ல் சலேசிய உடனுழைப்பாளராக படுக்கையிலேயே தன்னை அர்ப்பணித்து வாக்குறுதி எடுத்துக்கொண்டார். அருட்பணி உம்பெர்தோ, "சலேசிய குடும்பத்தில் ஒரு நபராக இருந்து, ஆன்மாக்களின் மீட்புக்காகவும் குறிப்பாக இளையோரின்

வாழ்வு மலரவும், உலகிலுள்ள அனைத்து சலேசிய உடனுழைப்பாளர்களின் மீட்புக்காகச் செபிக்கவும், துன்பங்களை அனுபவிக்கவும் இந்த குடும்ப அடையாள அட்டை வழங்கப்பட்டது" என்று எழுதியிருந்த அடையாள அட்டையைக் கொடுத்தார். அதோடு கோயிலின் புகைப்படத்தைப் பெரிதாக்கி தன் கண்முன் வைத்து, அதைப்பார்க்கும் போதெல்லாம் அதில் நிகழும் மறைநிகழ்வுகளில் பங்கெடுப்பதாக உணர்ந்தார். தொன் போஸ்கோவின் பணியினை இவ்வுலகில் தொடரப் பயிற்சி எடுக்கும் துறவற பயிற்சியாளர்களின் துன்புறும் சகோதரியாக விளங்கினார்.

**விண்ணிலே நாம் சந்திப்போம் :** 1955 மே 6ல் அமல அன்னை இவருக்குத் தோன்றி, "சில நாட்களில் உன்னை நான் அழைத்துச்செல்வேன்" என்று கூறியபடியே அதே மாதம் 13ம் நாள் அமல அன்னை அலெக்சாண்ட்ரீனாவை அழைத்துச் சென்றார். அப்போது "பாவம் செய்யாதீர், அடிக்கடி நற்கருணை உட்கொள்ளுங்கள், அன்றாடம் செபமாலைச் செபியுங்கள், விண்ணிலே நாம் சந்திப்போம், செல்கிறேன்" என்று சொல்லியும் இன்றிலிருந்து பாலசார் ஒரு திருயாத்திரை இடமாக மாறும் என்று கூறியும் கண்களை மூடினார். இன்றும் ஏராளமான திருப்பயணிகள், பாலசாரின் நெருக்கமான தெருக்களில் வந்த வண்ணமாக இருக்கின்றனர்.

## விண்ணிலிருந்து விழும் ரோஜா மலர் (புனித தெரேசா)

திரு. ஜான் சுரேஷ்

பிரான்சு நாட்டின் பாதுகாவலியாகிய குழந்தை இயேசுவின் புனித தெரேசாள் வேதபோதகநாடுகளின் பாதுகாவலியாக உயர்த்தப்பட்டார். தான் வாழ்ந்த இடத்தை விட்டு வெளியே செல்லாத ஒரு சாதாரணப் பெண்மணி உலகின் பல பகுதிகளுக்குச் சென்று எண்ணற்றவர்களை மனந்திருப்பி ஏராளமான சபைகளை நிறுவிய புனித சவேரியாருக்குச் சமமாக்கப்பட்டது வியப்பின் குறியீடு. நான்கு சுவர்களுக்குள்வாழ்ந்துக்கொண்டு உலகையே மனந்திருப்ப முடியும் என எடுத்துக்காட்டாக வாழ்ந்த சிறுமலரின் வாழ்வு ஒரு சிறுவழி வாழ்வு.

இவருடைய தந்தை லூயிஸ் மார்ட்டின், தாய் மரி அசெலி கேரென். இவர்கள் இருவருக்கும் 1873ம் ஆண்டு ஜனவரி மாதம் 2ம் நாள் 9வது குழந்தையாகப் பிறந்தார். இவருடைய பெற்றோர் குருத்துவ, துறவற வாழ்வு கிடைக்காத ஏக்கத்தில் இல்லற வாழ்வை தேர்ந்துக்கொண்டவர்கள். தங்கள் குடும்பத்தில் ஒரு புனிதர் உதயமாக வேண்டுமென்று இடைவிடாது செபித்தார்கள். தெரேசாவின் வாழ்வில் பெற்றோரின் தாகம் ஆழமாக வேரூன்றியது. அழைத்தலில் ஆணிவேர் குடும்பம் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. தமது நான்கு வயதில் தாயை இழந்த தெரேசா, மூத்த சகோதரியின் கவனிப்பில் வளர்ந்தார். பின்பு மூத்த சகோதரி பவுலினும், 2வது சகோதரி மரியும் கன்னியர் இல்லத்தில் சேர்ந்தனர். இதனால் தாமும் கார்மேல் சபையில் சேர வேண்டுமென்ற ஆவல் தோன்றியது. அப்பொழுது





அவருக்கு வயது 14. இல்லத்தலைவி வயதைக் காரணம் காட்டி அவரை சேர்க்கவில்லை. தெரேசா முயற்சியைக் கைவிடாமல் தன் தந்தையுடன் உரோமைக்குச் சென்று 13ம் சிங்கராயர் திருத்தந்தையிடம் அனுமதி கேட்டார். அவர் இறைச்சித்தம் இருந்தால் நீ கன்னியாவாய்" என்று சொல்லியனுப்பி விட்டார். மறுவருடம் ஆயர் அனுமதியுடன் கார்மேல் மடத்தில் சேர்ந்தார். "குழந்தை இயேசுவின் தெரேசாள்" என்று தனது பெயரை மாற்றிக்கொண்டார்.

கார்மேல் சபை புனிதர்களான சிலுவை அருளப்பர், அவிலா தெரேசாவைப் பற்றி அதிகம் படித்தார். மேலும் புனிதர் பற்றிய தேடலில் விவிலியத்தையும் ஆராய்ந்தார். 1864ல் முத்திப்பேறு பெற்ற தியோபேன் வாழ்க்கை வரலாறு அவருக்கு அளிக்கப்பட்டது. அவருடைய மாதிரியைப் பின்பற்றி வியட்நாம் கன்னியர் இல்லத்தில் சேர விரும்பினார். உடல் சுகவீனத்தின் காரணமாக இம்முயற்சி கைவிடப்பட்டது. லிசியே இல்லத்தில் 9 ஆண்டுகளே துறவற வாழ்வைப் பின்பற்றியுள்ளார். இவருடைய தந்தையின் உடல்நலக்குறைவால் இவரது வார்த்தைப்பாடு தள்ளிப்போடப்பட்டது. இக்காலக்கட்டத்தில் எவ்வித பதவியும் கொடுக்கப்படவில்லை. நவகன்னியர்களைக் கண்காணிக்கும் பொறுப்பை மட்டும் செய்துள்ளார். திருப்பலிக்குத் தயாரிக்கும் பணியையும், பக்தியுடன் செய்துள்ளார். அப்பொழுது அவர் சொன்ன வார்த்தை நெஞ்சைத் தொடுகின்றது. அப்பத்தைக் கையில் வைத்துக் கொண்டு, "நீ நாளை காலை திருப்பலியில் முற்றிலும் கிறிஸ்துவாக மாறிவிடுவாய். அந்த நிலையை அடைய நான் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ" என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்வாள்.

சிறிது காலத்திற்குப் பிறகு எலும்புருக்கி நோய் அவரைப் பற்றிக்கொண்டது. வாழ வேண்டிய இளம் வயதில் அந்த நோய் மிகுந்த வாதைக்குள்ளாக்கியது. அதிலிருந்து அவரால் மீளமுடியவில்லை. அவர் படும் வேதனையைப் பார்த்தவர் அவருக்காக இரக்கப்பட்டதுண்டு. ஆனால் தெரேசாள் ஆன்மாக்களை மீட்பதற்கு அவ்வியாதியை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். இந்த வேதனையோடு செய்யும் ஒவ்வொரு செயல்களையும் ஆன்மாக்களின் மீட்புக்காக ஒப்புக்கொடுத்தார். இறுதியாக 1897ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் நாள் கன்னியர்கள் அனைவரும் சூழ்ந்து நிற்கையில் உயிர் துறந்தார். வானதூதர்கள் அவரை விண்ணகத்திற்கு எடுத்துச் செல்வதை விசுவாசக் கண்ணோடு காண முடிந்தது.

அன்பு செய்வதே தன்னுடைய பணியெனக் கருதினார் குழந்தை தெரேசாள். அன்பின் அடையாளம் ரோஜா மலர். நான் விண்ணகம் சென்று ரோஜா மலர் மாரி பொழிவேன் என்றார். அன்பின் கனிவன்பினால் கனிந்த தெரேசாள் அன்றிலிருந்து இன்று வரை அருளை மாரிபோன்று வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றாள். இக்கூற்று உண்மையானது என

இறப்பிற்குப்பின் உலகின் பல பாகங்களிலிருந்து எண்ணற்ற மக்கள் மடல்களை வரைந்துள்ளனர். அவர்களுக்குப் பதில் அளிக்க தனி அலுவலகம் செயல்பட்டது. இன்றும் அவரிடம் மன்றாடுகின்றவர் அருள் பெறாமல் இருப்பதில்லை.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

### 15வது உலக ஆயர்கள் மாமன்றம்

வருகிற அக்டோபர் 3 புதன்கிழமை காலை பத்துமணிக்கு, வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் 15வது உலக ஆயர்கள் மாமன்றப் பிரதிநிதிகளுடன் இணைந்து, கூட்டுத் திருப்பலி நிறைவேற்றி, அந்த மாமன்றத்தை ஆரம்பித்து வைப்பார் திருத்தந்தை பிரான்சிஸ். "இளையோர் நம்பிக்கை மற்றும் அழைப்பை தெளிந்துத் தேர்தல்" என்ற தலைப்பில் இந்த 15வது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறும். அக்டோபர் 14 ஆண்டின் 28ம் ஞாயிறன்று, காலை பத்து மணி, 15 நிமிடத்திற்கு, வத்திக்கான் தூ ய பேதுரு வளாகத்தில் திருத்தந்தை ஆறாம் பவுல், பேராயர் ஆஸ்கர் ரொமேரோ, பிரான்செஸ்கோ ஸ்பினெல்லி, வின்சென்சோ ரொமானோ, மரிய கத்ரீனா காஸ்பர், குழந்தை தெரேசாவின் நசாரியா இஞ்ஞாசியா, நூன்சியோ சுல்பிரஸ்ஸியோ ஆகிய முத்திப்பேறு பெற்ற ஏழு பேரைப் புனிதர்கள் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும் திருப்பலியை நிறைவேற்றுவார் திருத்தந்தை பிரான்சிஸ். அக்டோபர் 28, ஆண்டின் 30ம் ஞாயிறன்று வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்காவில், 15வது உலக ஆயர்கள் மாமன்றத்தை நிறைவு செய்யும் திருப்பலியை நிறைவேற்றுவார், திருத்தந்தை பிரான்சிஸ்.

### ஆயர் பேரவைகளின் தலைவர்களோடு முக்கிய கூட்டம்

பாலின முறைகேடுகளிலிருந்து சிறாரைப் பாதுகாக்கும் வழிகளைக் கலந்து பேச, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் உலகெங்கிலும் உள்ள ஆயர் பேரவைகளின் தலைவர்களை வத்திக்கானுக்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

### கத்தோலிக்கருக்கு திருத்தந்தை எழுதியுள்ள கடிதம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அருள்பணியாளர்களின் பாலியல் முறைகேடு குற்றங்களுக்கு எதிராகக் கண்டனம் தெரிவித்து உலக கத்தோலிக்கருக்கு எழுதியுள்ள கடிதம் ஊக்கமளிப்பதாய் உள்ளது. அருள்பணியாளர்களின் பாலியல் குற்றங்களைச் சகித்துக் கொள்ளவே முடியாது என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உறுதியாய் கூறியிருப்பது ஊக்கமூட்டுகின்றது என, சிறார் பாதுகாப்புக்குரிய பாப்பிறைக் குழு கூறியுள்ளது. அருட்பணியாளர்களால் நடத்தப்பட்ட பாலியல் முறைகேடுகள், திருஅவையின் சில உறுப்பினர்களால்,





அவை மறைத்து வைக்கப்பட்டது போன்றவற்றால் துன்புறும் மக்களின் வேதனைகளைப் புரிந்துக்கொண்டு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள வார்த்தைகளுக்கு நன்றி தெரிவித்துள்ளது அக்குழு. இறைமக்கள் எல்லாருக்குமென திருத்தந்தை எழுதியுள்ள அக்கடிதத்தில் இவ்விவகாரத்தில் சிறிதுகூட சகிப்புத்தன்மைக் காட்டக் கூடாது என திருஅவைத் தலைவர்களுக்குத் திருத்தந்தை அழைப்பு விடுத்திருப்பது, தங்களது குழுவினருக்கு ஆதரவாக இருக்கின்றது எனவும், சிறார் பாதுகாப்புக்குரிய பாப்பிறைக் குழு கூறியுள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள நீண்ட கடிதத்தில், அருள்பணியாளர்களின் பாலியல் முறைகேடுகளால் வேதனைகளை அனுபவிக்கும் அனைவரிடமும் மன்னிப்பு கேட்டுள்ளார்.

### தன் பாலின உறவு சட்டமயமானது தவறு - இந்தியத் திருஅவை

இந்திய உச்ச நீதிமன்றம், தன் பாலின உறவுகளைச் சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளதை, இந்திய கத்தோலிக்கத் திருஅவை, நன்னெறி முறையில் சரியென்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்துள்ளது. கத்தோலிக்கத் திருஅவை, தன் பாலின உறவை ஒருபோதும் ஆதரிக்காது என்றும், ஆண் பெண் உறவும், குடும்பமும் திருஅவையின் கருத்துக்களாக எப்போதும் இருக்கும் என்றும், இந்திய ஆயர் பேரவையின் துணைத் தலைவர், ஜோஷிவா மார் இஞ்ஞாதியோஸ் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார். தன் பாலின உறவைக் குற்றம் என்று இதுவரைக் கூறிவந்த இந்தியச் சட்டத்தின் 377-யு பிரிவை நீக்கி, கடந்த வாரம் செப்டம்பர் 6ம் தேதியன்று, இந்திய உச்ச நீதிமன்றம் வழங்கியத் தீர்ப்பு, சட்டப்பூர்வமாக மாறியிருக்கலாமே தவிர, அது நன்னெறி வழியில் சரியான முடிவு அல்ல என்று, இந்திய ஆயர் பேரவையின் நீதி, அமைதி, மற்றும் முன்னேற்றப் பணிக்குழுவின் செயலர் அருள்பணி ஸ்டீபன் பெர்னாண்டஸ் அவர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். மனித பாலின ஈர்ப்பும் உறவும் அடுத்த தலைமுறையை உருவாக்குவதற்கென்று இறைவனால் ஏற்படுத்தப்பட்டவை என்றும், தன்பாலின ஈர்ப்பும் உறவும், இறைவனின் திட்டத்திற்கு முரணாகச் செல்கின்றன என்றும் அருள்பணி பெர்னாண்டஸ் அவர்கள் கூறினார்.

### இந்திய கிறிஸ்தவர்கள் திருத்தந்தைக்குக் கடிதம்

இந்தியாவின் கந்தமால் மாவட்டத்தில் 2008ம் ஆண்டில் கிறிஸ்தவர்க்கெதிராகஇடம்பெற்றவன்முறைக்குப்பலியானகிறிஸ்தவர்கள், விசுவாசத்தின் மறைச்சாட்சிகளாக அறிவிக்கப்படுமாறு, இந்திய தேசிய கத்தோலிக்கக் கழகத்தின் முன்னாள் தலைவர், ஜான் தயாள் அவர்கள், திருத்தந்தைக்கு திறந்த கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். ஒடிசாவின் கந்தமால் மாவட்டத்தில், கிறிஸ்தவர்க்கெதிராக வன்முறைகள் இடம்பெற்ற பத்தாமாண்டு நிறைவையொட்டி, இக்கடிதத்தை வெளியிட்டுள்ள, இந்திய சமூக ஆர்வலரான ஜான் தயாள் அவர்கள், கந்தமால் கிறிஸ்தவர்களின்

விசுவாசம் திருஅவையில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இத்தகைய தியாகத்தை மேற்கொண்டவர்கள், திருஅவை வரலாற்றில் மறைச்சாட்சிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ள ஜான் தயாள் அவர்கள், கட்டக்-புவனேஸ்வர் பேராயர், இந்தியாவின் நான்கு கர்தினால்கள், மற்றும் தலத்திருஅவைத் தலைவர்களை, இவ்விவகாரத்தில் தீவிரம் காட்டுமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் தலைவர் சுவாமி லஷ்மானந்தா அவர்கள், 2008ம் ஆண்டு ஆகஸ்டில் கொலைச் செய்யப்பட்ட விவகாரத்தில், கிறிஸ்தவர்கள்மீது குற்றம் சுமத்தி, இந்து தீவிரவாத அமைப்பினர், அதே ஆண்டு ஆகஸ்ட் 25ம் தேதியன்று கந்தமால் மாவட்டத்தில் வன்முறையில் ஈடுபட்டனர். இவ்வன்முறையில் சிறார், பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், புதிதாகப் பிறந்த குழந்தைகள் உட்பட அறுபதாயிரத்துக்கும் அதிகமானோர் காடுகளுக்குச் சென்று ஒளிந்துக்கொண்டனர். அவர்களில் முப்பதாயிரம் பேர் ஓராண்டு அளவாக, அரசின் முகாம்களில் வாழ்ந்தனர். ஆறாயிரத்துக்கு அதிகமான வீடுகளும், 300க்கு அதிகமான ஆலயங்களும் அழிக்கப்பட்டன. மேலும் 120 பேர் கொல்லப்பட்டனர்.

### தலித் கிறிஸ்தவர்களின் உரிமைகளுக்காக

இந்திய ஆயர் பேரவையின் பிற்படுத்தப்பட்ட பணிக்குழு, திருச்சியில் மாநாடு நடத்தி, தலித் கிறிஸ்தவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படுமாறு அரசை வலியுறுத்தியது. இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் உரிமைகள், தலித் கிறிஸ்தவர்களுக்கும் வழங்குவதற்கு ஆதரவு அளிக்கும் கட்சிகளுக்கும், கிறிஸ்தவ சமூகம் வாக்களிக்குமாறு, தமிழகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்திய ஆயர் பேரவையின் பிற்படுத்தப்பட்ட பணிக்குழு திருச்சபையில் நடத்திய மாபெரும் பேரணி மற்றும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், 2019ம் ஆண்டில் நடைபெறவிருக்கும் லோக் சபா தேர்தலிலும், கிறிஸ்தவ சமூகம், இவ்வாறு செயல்படுமாறு வலியுறுத்தப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் தாங்களும் இணைக்கப்படுவதற்கு தலித் கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கும் உரிமைக்கு ஆதரவளிக்காத கட்சிகள் மற்றும் அவற்றின் தோழமைக் கட்சிகளைக் கிறிஸ்தவ சமூகம் புறக்கணிக்குமாறும், இம்மாநாட்டில் கூறப்பட்டது. இந்திய ஆயர் பேரவையின் பிற்படுத்தப்பட்ட பணிக்குழு ஏற்பாடு செய்திருந்த இம்மாநாட்டில் தமிழக ஆயர் பேரவைத் தலைவர் மதுரைப் பேராயர் அந்தோணி பாப்புசாமி, துணைத்தலைவர், செங்கல்பட்டு ஆயர் நீதிநாதன், தமிழக ஆயர் பேரவையின் பிற்படுத்தப்பட்ட பணிக்குழுத் தலைவர், திண்டுக்கல் ஆயர் தாமஸ் பால்சாமி உட்பட, பிரிந்த கிறிஸ்தவ சபைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.





## சுடர் வாசகர் போட்டி - 51 சரியான விடைகள்

1. 3 வயதில்
2. கிறிஸ்தவர்களின் அடையாளமாக
3. லுவேய்ன் பல்கலைக்கழகம்
4. திருத்தந்தை 13ம் பெனடிக்ட்
5. புனித பேதுரு
6. மிக்கேல் - கடவுளுக்கு இணையானவர்
   கபிரியேல் - இறைவனின் பலம்
   ரபேல் - இறைவன் குணமாக்கினார்
7. வானதூதர்களின் நினைவு நாள்
8. புனித மத்தேயு
9. செப்டம்பர் 22ம் தேதி
10. 105 நாட்கள்
11. இயேசுவின் சீடர்கள்
12. புனித வின்சென்ட் தே பவுல்
13. நவம்பர் 1872ல் பிறந்தார்
14. கடவுளின் பண்பு
15. உங்களை துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள், ஆம், ஆசி கூறுங்கள். சபிக்க வேண்டாம்.

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

**சகோ. மேரி கிலாடி, சின்னமலை, சென்னை**

**திரு. இருதய ராஜ் பீரிஸ், சென்னை**

**சகோ. ஜோஸ்பின் சகாயமேரி, சென்னை**

## சுடர் வாசகர் போட்டி - 52

1. அருளாளர் அலெக்சாண்டிரியா மரிய த கோஸ்தா எங்கு பிறந்தார்?
2. "கடவுளை என்னுள் கொண்டு செல்கிறவன் நான்" என்றுரைத்தவர் யார்?
3. புனித ஆல்பர்ட் மர்வெல்லி தனது இளமைப்பருவத்தின் முன்மாதிரியாக யாரை பின்பற்றினார்?
4. அக்டோபர் 2ஆம் நாளில் காவல் தூதர்களுக்கு விழா கொண்டாட அனுமதியளித்த திருத்தந்தை யார்?
5. எதோடு ஒப்பிடும் போது பொன்னும், வெள்ளியும், மாணிக்கமும் சிறிதளவு மண்ணுக்கு சமம் என்கிறார் ஆசிரியர்?
6. மகிழ்ச்சியின் நற்செய்தி என்று அழைக்கப்படும் நற்செய்தி எது?
7. "மனிதர் அனைவரும் மாண்புடன் சாக உரிமை உள்ளவர்கள்" கூறியது யார்?
8. தூக்கு மேடைக்கு சென்ற பிரான்சினி யாருடைய செபத்தால் மனம் மாறினார்?
9. பெண்களுக்கான Order of St. Clare சபையை உருவாக்கியவர் யார்?
10. பிறரன்பின் பொறியியல் வல்லுநர் என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர் யார்?
11. "மனிதரின் மீட்பே இறைவனின் மகிமை" என்ற இலக்கு யாருடையது?
12. "அன்பே வாழ்வு" என்று வாழ்ந்த புனிதை யார்?
13. "அன்பு மிக்க மருத்துவரே" என்று புனித பவுலடிகளாரால் புகழப்பட்டவர் யார்?
14. புனித இரண்டாம் யோவான் பவுலின் பெற்றோர் யார்?
15. 15வது உலக ஆயர் மாமன்றத்தின் தலைப்பு என்ன?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை அக்டோபர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று

பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)





## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனிதர் அனைவர் பெருவிழா
இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு
ஆண்டின் பொதுக்காலம் 31ம் ஞாயிறு
இறந்த சலேசிய உடனுழைப்பாளர்கள், உபகாரிகளுக்காக
இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு விழா
புனித பெரிய லெயோ
ஆண்டின் பொதுக்காலம் 32ம் ஞாயிறு
அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி
அருளாளர் மதலேனா மொரானோ
ஆண்டின் பொதுக்காலம் 33ம் ஞாயிறு
புனித கன்னி மரியாவை காணிக்கையாக அர்ப்பணித்தது
புனித செசிலியா
கிறிஸ்து அரசர் பெருவிழா
புனித அந்திரேயா திருத்தூதர் விழா

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

இறப்பும் நம் நம்பிக்கையும்
அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி - வாழ்வு தரும் பாடம்
கிறிஸ்துவே உலகின் அரசர்
திருச்சபை செய்திகள்

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

# டிசம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | ச | | தானி. 22: 1-7 | லூக். 21: 34-36 |
| 2 | ஞா | **திருவருகைக் காலம் முதல் ஞாயிறு** | எரே. 33: 14-16<br>1தெச. 3:12-4:2 | லூக்.21:25-28,34-36 |
| 3 | தி | புனித பிரான்சிஸ் சவேரியார் பெருவிழா | எசா. 61: 1-3<br>1கொரி. 9: 16-19, 22-23 | மாற்கு 16: 15-20 |
| 4 | செ | புனித ஜான் தமாசின் | எசா. 11: 1-10 | லூக். 10: 21-24 |
| 5 | பு | | எசா. 25: 6-10 | லூக். 15: 29-37 |
| 6 | வி | புனித நிக்கோலாஸ் | எசா. 26: 1-6 | மத். 7: 21, 24-27 |
| 7 | வெ | புனித அம்புரோஸ் ஆயர் | எசா. 29: 17-24 | மத். 9: 27-31 |
| 8 | ச | தூய கன்னி மரியாவின் அமலோற்பவம் **பெருவிழா** | தொ.நூ. 3: 9-15,20<br>எபே. 1: 3-6, 11-12 | லூக். 1: 26-38 |
| 9 | ஞா | **திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு** | பாரூக் 5: 1-9<br>பிலி. 1: 4-6,8-11 | லூக். 3: 1-6 |
| 10 | தி | | எசா. 35: 1-10 | லூக். 5: 17-26 |
| 11 | செ | புனித முதலாம் தமாசு | எசா. 40: 1-11 | மத். 18: 12-14 |
| 12 | பு | புனித குவாதெலுப் அன்னை | எசா. 40: 25-31 | மத். 11: 28-30 |
| 13 | வி | புனித லூசியா கன்னியர் | எசா. 41: 13-20 | மத்.11: 11-15 |
| 14 | வெ | புனித திருச்சிலுவை யோவான் | எசா. 48: 17-19 | மத். 11: 16-19 |
| 15 | ச | | சீ.ஞா. 48: 1-4, 9-11 | மத். : 17: 10-13 |
| 16 | ஞா | **திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு** | செப். 3: 14-17<br>பிலி. 4: 4-7 | லூக். 3: 10-18 |
| 17 | தி | | தொ.நூ. 49: 1-2, 8-10 | மத். 1: 1-17 |
| 18 | செ | | எரே. 23: 5-8 | மத். 1: 18-24 |
| 19 | பு | | நீத. 13: 2-7, 24-25 | லூக்.1: 5-25 |
| 20 | வி | | எசா. 7: 10-14 | லூக். 1: 26-38 |
| 21 | வெ | | இ.பா. 2: 8-14(அ)செப்3:14-17 | லூக். 1: 39-45 |
| 22 | ச | | சாமு.1: 24-28 | லூக். 1: 46-56 |
| 23 | ஞா | **திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு** | மீக்கா 5: 2-5<br>எபி. 10: 5-10 | லூக். 1: 39-45 |
| 24 | தி | | 2சாமு. 7: 1-5,8-12,16 | லூக். 1: 67-79 |
| 25 | செ | **கிறிஸ்து பிறப்பு பெருவிழா** | எசா. 52: 7-10<br>எபி. 1: 1-6 | யோவா. 1: 1-18 |
| 26 | பு | புனித ஸ்தேவான் முதல் மறைசாட்சி - விழா | தி.ப. 6: 8-10, 7: 54-60 | மத். 10: 17-22 |
| 27 | வி | புனித யோவான் திருத்தூதர் - விழா | 1யோவா. 1: 1-4 | யோவா. 20: 2-8 |
| 28 | வெ | மாசில்லா குழந்தைகள் விழா | **1யோவா. 2: 5-2:2** | மத். 2: 13-18 |
| 29 | ச | புனித தாமஸ் பெக்கெட் | 1யோவா. 2: 3-11 | லூக். 2: 22-35 |
| 30 | ஞா | **திருக்குடும்ப விழா** | 1சாமு. 1: 20-22,24-28<br>யோவா. 3: 1-2,21-24 | லூக். 2: 41-52 |
| 31 | தி | புனித முதலாம் சில்வெஸ்தர் - திருத்தந்தை | 1யோவா. 2: 18-21 | யோவா. 1: 1-18 |